# செயல்நிறைவேற்று அறிக்கையும் வருடாந்த கணக்குகளும்

**2015 ஆம் ஆண்டுக்கானது**

## வர்த்தக திணைக்களம்

## தலைப்பு 295


*4 ஆவது மாடி, "ரக்ஷன மந்திரய"*
*இல. 21, வொக்ஸோல் வீதி,*
*கொழும்பு 02.*
*தொலை : 011-2329733 / 2436114*
*தொலைநகல் : 011 - 2430233*
*மின்னஞ்சல் : fortrade@doc.gov.lk*
*இணையம் : www.doc.gov.lk*

**பொருளடக்கம்**


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 03 |
| 2 | இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தின் மீளாய்வு - 2015 | 07 |
| 3 | பல்தரப்பு வர்த்தக உறவுகள் | 12 |
| 4 | இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு | 18 |
| 5 | பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு | 25 |
| 6 | வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு | 30 |
| 7 | உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை (COOs) வழங்குதல் | 43 |
| 8 | பதவியினர் இடநகர்வுகள் 2015 | 45 |
| 9 | வருடாந்த கணக்குகள் 2015 | 47 |

## அட்டவணைகளின் பட்டியல்


| | பக்கம் |
|---|---|
| இலங்கையின் மொத்த இறக்குமதிகள், மொத்த ஏற்றுமதிகள், மொத்த வர்த்தக மீதி (2010 – 2015) | 08 |
| வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பொழிப்பு (2011-2015) | 32 |
| வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 2011-2015 (உடன்படிக்கை ரீதியாக) | 44 |


## விளக்கப்படங்களின் பட்டியல்


| | பக்கம் |
|---|---|
| வர்த்தக திணைக்களத்தின் நிருவாக கட்டமைப்பு | 05 |
| வர்த்தக திணைக்களத்தின் உறவுகள் | 06 |
| இலங்கையின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொகுப்பு | 09 |
| ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகப் போக்கு – 2015 | 10 |
| இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான அதன் பிரான வர்த்தக பங்காளிகளுக்கு எதிராக உலகளாவிய இறக்குமதிகளின் பங்காளிகள் (2015) | 11 |

# 1. அறிமுகம்

***திணைக்களத்தின் நோக்கு***

> ***"சர்வதேச வர்த்தக உறவுகளினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்"***

***திணைக்களத்தின் செயற்பணி***

> ***"இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பயன் மிக்கதான சேவையினை வழங்குவதன் மூலம் மொத்த உற்பத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதனூடாக வாழ்க்கைத் தரங்களை உயர்த்தி வாழ்வின் அதி உன்னத இடத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தின் வர்த்தக கொள்கையினை வினைத்திறனுடன் அமுலாக்குவதன் ஊடாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு மட்டங்களில் ஊக்குவித்து விருத்தி செய்தலாகும்."***

வர்த்தக திணைக்களமானது (வ.தி), கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் சர்வதேச வர்த்தக கொள்கை விடயங்களிலும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளினை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு மட்டங்களில் பேணிக்கொள்வதிலும் மதியுரை வழங்கும் முகவராண்மையென்ற முக்கியமான பாத்திரத்தினை வகித்து வருகின்றது. வர்த்தக கொள்கை மற்றும் ஊக்குவிப்புக்களுடன் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக வர்த்தக திணைக்களத்தினால் பல்வேறு தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வர்த்தக திணைக்களத்தினால் இது தொடர்பில் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய பணிகள் பற்றி சுருக்கமாக கீழே தரப்படுகின்றது.

- உரிய வரிசை அமைச்சுக்கள் / அதிகாரசபைகள் மற்றும் தனியார் துறை அக்கறைதாரர்களுடன் ஒருங்கிணைந்து இலங்கையின் சர்வதேச வர்த்தக கொள்கையினை வகுத்தலும் அமுல்படுத்துதலும்.


- நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியினை விருத்தி செய்யும் வகையில் வெளிநாட்டு வர்த்தக கொள்கை தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல்.

- வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தக பிரதிநிதிகளினூடாக வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளிலிலுள்ள இலங்கையின் வர்த்தக நலன்களை ஊக்குவித்தல்.

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது வெளிநாட்டு வர்த்தக துறை தொடர்பான அரசாங்கத்தின் நோக்கு மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி நோக்கில் மேற்கொள்ளக்கூடிய முக்கியமான பங்களிப்புக்களின் அடிப்படையில் அதன் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளது. அந்தவகையில், 2015 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டம், தற்போதிருக்கும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துதல், புதிய சந்தைகளையும் உற்பத்திப் பொருட்களையும் ஊக்குவித்தல், சர்வதேச வர்த்தக

முறைமையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை ஊக்குவித்தல் மற்றும் தென்னாசிய பிராந்தியத்தில் வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் நாடாக இலங்கையை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. வர்த்தக திணைக்களம், அதன் வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவத்தினூடாக நேரடி வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அவ்வாறே இலங்கை சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பதற்குத் தேவையான உதவிகளையும் அவசியமான வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது.

# வர்த்தக திணைக்களத்தின் நிருவாக கட்டமைப்பு





<u>Abbreviation</u>

| | |
|---|---|
| D | Director |
| DD | Deputy Director |
| AD | Asst. Director |
| CRO | Commercial Research Officer |
| DO | Development Officer |
| Mgt. Asst. | Management Asst. |
| KKS | Office Aid |

*Most senior (Director Level) officers are required to be posted as Ambassador/ PR to WTO, Washington, London, Brussels and Karachi.

## வர்த்தக திணைக்களத்தின் உறவுகள்



## 2. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு – 2015

வெளிநாட்டு வர்த்தகமானது அரசாங்க கொள்கையிலுள்ள இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் உயர்ந்தளவிலான முன்னுரிமையுடன் பேணப்பட்டு வருகின்றது. இது இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளினை அடைவதற்கான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நுண்பாக பொருளியல் விடயங்களில் ஒன்றாகும். இது உலகப் பொருளாதாரத்திற்கான மிகப்பெரிய ஒருங்கிணைப்பினை அடையும் நோக்குடன், உலக வர்த்தக நிறுவனத்தின் பல்தரப்பு வர்த்தக முறைமையின் அடிப்படையிலான விதிகளுக்கமைவாக தொழிற்படுவதுடன் வெளிநோக்கிய வர்த்தக கொள்கையினை அடையும் நோக்குடனும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு, இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான வெளிநாட்டு சந்தை வாய்ப்பினை வலுபடுத்துதல், வர்த்தக பகுப்பாய்வினை மேலும் வலுப்படுத்துவதன் மூலம் தேசிய சட்ட ரீதியான அபிவிருத்தியில் வர்த்தக ஊக்குவிப்பினை ஒருங்கிணைத்தல் மற்றும் தரிவுக் கொள்கைகள், நியாயமான வர்த்தக சூழலினை வசதிப்படுத்துதல் மற்றும் முதலீட்டினை ஊக்குவித்தல் உள்ளடங்கலானவை அதன் நோக்கங்களாக இருந்துள்ளன. இத்தகைய நோக்கங்கள் பலதரப்பு, பிராந்திய மற்றும் இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளினூடாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

உலகளாவிய அளவொன்றிலான வர்த்தக சுதந்திரமளித்தலினை நோக்கியதாக பொதுவான இருந்தபோதிலும், இலங்கையானது சிறியதும் நலிவடைந்ததுமான பொருளாதாரமாக நடைமுறைகள் மற்றும் தேவைப்பாடுகள் போன்ற வரியல்லா நடைமுறைகளிலிருந்து எழுகின்ற பாதகமான விளைவுகள் உள்ளடங்கலான பெருமளவிலான சவால்களினை எதிர்நோக்குகின்றது. வரியல்லா நடைமுறைகளின் பயன்பாடானது 2008 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியினைத் தொடர்ந்து தொடர்ந்தும் அதிகரித்து வந்துள்ளதுடன், அதன் ஏற்றுமதி சந்தைகளினால் வரி விடுதலையளிப்பில் ஏதேனும் முன்னேற்றங்களினை வலிதற்றதாக்குகின்ற அத்தகைய நடவடிக்கைகளின் போது இலங்கைக்கான பிரச்சனையானது தொடர்ந்துமிருக்கும்.

உலகளாவிய பொருளாதாரத்தில் வீழ்ச்சிப் போக்கானது இருந்துள்ள போதிலும், இலங்கையானத, இலங்கையின் எற்றுமதிகளுக்கான புதிய அல்லது மாற்று சந்தைகளினைக் கண்டறிதல் உள்ளடங்கலான முயற்சிகளில் அதிகம் கவனம் செலுத்தியுள்ளது. சீனா, பிறேசில், ரஷியா, துருக்கி, யப்பான், தென் கொரியா மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் வர்த்தக விரிவாக்கலுக்கான வாய்ப்புக்களைக் கொண்டுள்ள சில நாடுகளாக இனங் காணப்பட்டுள்ளன.

தற்போதிருக்கின்ற சர்வதேச சந்தைகளில் இலங்கையின் பங்கினை மேலும் அதிகரித்தலானது முக்கியத்துவம் வாய்ந்த பணியாகவும் சவால் நிறைந்த பணியாகவும் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. தற்போதிருக்கின்ற சந்தைகளிலுள்ள இலங்கையின் பங்கினை அதிகரிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் குறிப்பாக, இலங்கை பங்காளராக இருக்கின்ற சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் கிடைக்கக்கூடிய சந்தை அணுகுமுறை வாய்ப்புக்களினை விரிவுபடுத்துதல் மற்றும் அதி கூடிய பயன்பாடு என்பவற்றின் மூலம், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூட்டு ஆணைக்குழுக்களின் கலந்துரையாடல்கள் மற்றும் வர்த்தக ஊக்குவிப்புக்கான நாடுகளுக்கிடையில் பரஸ்பர ஒத்துழைப்பினை அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் செயற்பாடுகள் மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றன.


மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், நாட்டின் சர்வதேச வர்த்தக கொள்கையானது ஏற்றுமதித் துறையின் விருத்தியினை நோக்கமாக்க கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயத்தில், அரசாங்கமானது கிராமிய மற்றும் நகர துறைகளுக்கிடையில் தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் உற்பத்தி திறன்களை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டு வர்த்தகத்தின் பயன்களை பகிர்வதற்குமான முன்னுரிமைகளை வழங்கியுள்ளது. நாட்டின் பொருளாதார கொள்கை திட்டமிடலானது தொழில்நுட்ப புத்தாக்கத்தினை வழங்குதல், புதிய கைத்தொழில் வலயங்களில் தனியார் முதலீட்டினை வசதிப்படுத்துதல், பொதுச் சேவை வழங்கலினை தரமுயர்த்துதல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் (SMEs) விருத்தியினை மேம்படுத்துதல் என்பவற்றின் மூலம் கைத்தொழில் துறையில் சர்வதேச போட்டித் தன்மையினை மேம்படுத்துவதனையும் நோகமாகக் கொண்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏற்றுமதிப் பங்கினை அதிகரிக்கும் நோக்குடன், அரசின் பொருளாதார கொள்கைகள் தொழில்நுட்ப அடிப்படையிலான ஏற்றுமதிகள் உலகின் வடிவமைக்கப்பட்ட ஏற்றுமதி தேவைகளுக்கான முதலீட்டாளர்களினை இனங்காணும் நோக்குடன் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

## 2.1 மொத்த இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் வர்த்தக மீதி : 2010 – 2015 (மில்.அ.டொலர் பெறுமதியில்)

| ஆண்டு | ஏற்றுமதிகள் | வளர்ச்சி % | இறக்குமதிகள் | வளர்ச்சி % | மொத்த வர்த்தகம் | வர்த்தக மீதி |
|---|---|---|---|---|---|---|
| **2010** | 8,294 | 16.5 | 12,340 | 26.4 | 20,634 | -4,047 |
| **2011** | 10,018 | 20.8 | 19,703 | 59.7 | 29,721 | -9,685 |
| **2012** | 9,181 | -8.4 | 17,889 | -9.2 | 27,069 | -8,708 |
| **2013** | 10,009 | 9.0 | 17,098 | -4.4 | 27,107 | -7,088 |
| **2014** | 11,044 | 10.3 | 19,246 | 12.6 | 30,290 | -8,202 |
| **2015** | 10,212 | -7.5 | 18,989 | -1.3 | 29,201 | -8,777 |


*மூலம்: இலங்கைச் சுங்கம்*

## 2.2 ஏற்றுமதி இறக்குமதி செயல்நிறைவேற்றம்




2015 ஆண்டு காலப்பகுதியில், இலங்கையின் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியமானது 10,212 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளதுடன் 2014 இல் அதன் பெறுமதி 11,044 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளது.


இலங்கையின் ஏற்றுமதி சம்பாத்தியங்களில் தைத்த ஆடைகளே முன்னிலை வகிப்பதுடன் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியத்தில் 44.6% ஆகும். 2015 இல் தைத்த ஆடைகளின் ஏற்றுமதி வருமானத்தில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், ஏற்றுமதி சந்தையில் அதன் பங்கானது அதிகரித்துள்ளது. 2015 இரண்டாவது மிகப் பெரிய ஏற்றுமதியாக தேயிலை விளங்கியது (13%). அதனைத் தொடர்ந்து திண்ம மற்றும் ஏனைய ரயர்களும் (3%), கப்பல்கள், படகுகள் மற்றும் மிதக்கும் கட்டுமானங்கள் (1.7%), இறப்பர் கையுறைகள் (1.6%) மற்றும் மிளகு (1.4%) என்பன காணப்பட்டன. கப்பல்கள், படகுகள் மற்றும் மிதக்கும் கட்டுமானங்கள், கையுறைகள், தெங்கு மற்றும் தும்பு நார் என்பன 2014 உடன் ஒப்பிடுகையில் 100% அதிகரிப்பினைக் காட்டியுள்ளன.




2015 அம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவினம் 18,989 மில்லியன் அ.டொலருக்கு வீழ்ச்சியடைந்துள்ளதுடன் இது 2014 இல் 19,246 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளதுடன் 1.3% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது.

2015 இல் இலங்கையின் இறக்குமதிக் கூடையானது எரிபொருளினால் 10.1% பங்குடன் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது குறைவாகும் (17.1%). இது 2014 உடன் ஒப்பிடுகையில் பாரிய வீழ்ச்சியாகும் (42%). மோட்டார் வாகனங்களின் இறக்குமதியும் 6.7% பங்குடன் இலங்கையின் இறக்குமதி கூடையில் பிரதான இடத்தினை வகித்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 77% இனால் அதிகரித்திருந்தது. அதனைத் தொடர்ந்து துணிகளும் பருத்தியும் (6.6%), இரும்பும் உருக்கும் (5.2%), பிளாஸ்ரிக் பொருட்கள் (3.9%) மற்றும் போட்லன்ட் சீமெந்தும் (2.6%) காணப்பட்டன.


## 2.3 2015 வரையில் இலங்கை வர்த்தகத்தின் போக்கு




| ஏற்றுமதிகள் (%) | |
|---|---|
| ஐஒ | 29.5 |
| ஐக்கிய அமெரிக்கா | 27.4 |
| இந்தியா | 6.3 |
| சீனா | 2.9 |
| ஐக்கிய அரபு அமீரகம் | 2.7 |

| இறக்குமதிகள் (%) | |
|---|---|
| இந்தியா | 22.5 |
| சீனா | 19.7 |
| ஐஒ | 9.5 |
| ஜப்பான் | 7.3 |
| ஐக்கிய அரபு அமீரகம் | 5.7 |

## 2.4. இலங்கையின் ஏற்றுமதிகள் அதன் பிரதான வர்த்தக பங்காளர்களுக்கெதிராக உலகிலிருந்தான பங்காளர்களின் இறக்குமதிகள் (2015)




*மூலம்: இலங்கையின் ஏற்றுமதிப் பங்களாளரின் மாற்றம் – இலங்கைச் சுங்கம்*

*உலகிலருந்தான இறக்குமதி பங்காளரின் மாற்றம்– trademap.org*

இந்த வரைபானது இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான பிரதான ஏற்றுமதிப் பங்காளர்கள் உலகிலிருந்தான அவற்றின் மொத்த இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையிலுள்ள மாற்றத்தினை விபரிக்கின்றது. இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான எற்றுமதிப் பங்காளரான ஐக்கிய அமெரிக்காவுக்கான எற்றுமதிகள் (இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 27%) 2.9% இனால் அதிகரித்துள்ள போதிலும், ஐக்கிய அமெரிக்காவிடமிருந்தான மொத்த இறக்குமதிகள் 1.6% இனால் வீழ்ச்சியடைந்துள்ளமையினை இங்கு அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான போக்கினையே இந்தியா (இலங்கையின் மொத்த எற்றுமதிகளில் 6%) மற்றும் சீனா (இலங்கையின் மொத்த எற்றுமதிகளில் 3%) நாடுகளுக்கான வர்த்தகத்திலும் அவதானிக்க முடிகின்றது.

மாறாக, இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய வர்த்தகப் பங்காளரான ஐக்கிய இராச்சியத்துக்கான இலங்கையின் எற்றுமதிகள் (இலங்கையின் மொத்த எற்றுமதிகளில் 10%) 7.8% இனால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், ஐக்கிய இராச்சியத்தின் மொத்த இறக்குமதிகள் 9.9% மிகைப் பெறுமதியினால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் ஜேர்மன் மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளுகளின் நிலையும் அவ்வாறே இருந்துள்ளது. இவ்வாறானா புள்ளிவிபரங்கள் இத்தகைய நாடுகளுடனான எமது சந்தைப் பங்கினைப் பேணுவதிலும் மேம்படுத்துவதிலும் நாம் வெற்றியடைந்துள்ளோம் என்பதனை எமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

# 3. பல் தரப்பு வர்த்தக உறவுகள்

இலங்கையின் பலதரப்பு வர்த்தக உறவுகள் உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) உடன்படிக்கைகள் மீது கூடிய அக்கறையினைக் காட்டியுள்ளன. இலங்கையானது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD), உலக புலமைச் சொத்துக்கள் நிறுவனம் (WIPO), சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் WTO சட்டவிதிக்கான மதியுரை நிலையம் (ACWL) ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றது.

## 3.1 உலக வர்த்தக நிறுவனத்தில் இலங்கையின் பிரதிநிதித்துவம்

ரசட்ட விதிகளின் அடிப்படையிலான பல்தரப்பு வர்த்தக முறைமையினை உருவாக்குதல், அமுல்படுத்துதல் மற்றும் கண்காணித்தலினை மேற்கொள்ளும் நிறுவனம் என்றவகையில் உலக வர்த்தக நிறுவனத்தின் செயற்பாடானது, கென்யாவில் 2015 டிசம்பரில் நடாத்தப்பட்ட 10 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளின் போது மிகவும் கூடிய கவனத்துடன் முன்னெடுக்கப்பட்டிருந்து. அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டின் விளைவு தீர்மானிப்பதற்கு முனைப்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் குழுவுடன் இணைந்து இலங்கையானது, சிறிய பொருளாதாரமென்ற வகையில் வர்த்தகத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி தேவைப்பாடுகள் குறித்து விளக்கமளிப்பதில் மிகவும் காத்திரமான பங்களிப்பினை வழங்கியது. டோஹா அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் (DDA) தொடர்ந்துவரும் பிரச்சனைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளினை தொடர்வது குறித்த மீள்உறுதிப்படுத்துகையில் இணக்கப்பாடு காணப்படாத போதிலும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பெரும்பாலானவை டோஹா அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் தொர்பான பேச்சுவார்த்தைகளினை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. விவசாய உள்நாட்டு ஆதரவு, விவசாய சந்தை அணுகுமுறை, விவசாயமல்லா சந்தை அணுகுமுறை (NAMA) மற்றும் சேவைகள் மீதான பேச்சுவார்த்தைகள் போன்றவற்றின் பிரதான விடயங்கள் நைரோபி அமைச்சர்கள் மட்டத்திலான நிகழ்வின்போது குறிப்பிடத்தக்க அளவில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை.

நைரோபி அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தின் பிரதான பெறுபேறு;

- ஏற்றுமதிப் பதிலீடுகளினை முழுமையாக இல்லாமல் செய்வதற்கான சட்ட ரீதியான இணக்கப்பாடுகளினை மேற்கொள்ளுதல்.
- பருத்தி கைத்தொழில் துறைக்கான சந்தை அணுகுமுறை, உள்நாட்டு ஆதரவு மற்றும் ஏற்றுமதிப் போட்டி என்பவற்றில் மறுசீரமைப்புக்களை அறிமுகம் செய்தல்.
- முன்னுரிமை வாய்ந்த மூல விதிகள் மற்றும் முன்னுரிமை வாய்ந்த சேவைகளின் சாதகமான முறைமை மற்றும் குறை விருத்தி நாடுகள் மீதான தீர்மானங்கள்
- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உறுப்பினர்களுக்காக விசேட பாதுகாப்பு பொறிமுறைமையினை (SSM) வசதிப்படுத்துதல்
- சிறிய பொருளாதாரங்கள் மீதான வேலைத் திட்டங்களினைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது தொடர்பான தீர்மானம்
- இலத்திரனியல் வர்த்தகம் தொடர்பான வேலைத் திட்டங்களினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல்

- உணவுப் பாதுகாப்பு நோக்கங்களுக்காக பொது இருப்புக்களினை வழங்குவது தொடரபான நிரந்தர தீர்மானமொன்றினை ஏற்றுக் கொள்வதற்கும் பின்பற்றுவதற்குமான பேச்சுவார்த்தைகளினை தொடர்ந்தும் முன்னெடுத்தல்.

விவசாய ஏற்றுமதி மானியம் தொடர்பில், விருத்தியடைந்த நாடுகள் அமைச்சரவை தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்து தற்போதிருக்கும் விவசாய ஏற்றுமதி மானியத்தினை நீக்குவதற்கு எதிர்பார்க்கின்ற அதேவேளையில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் 2018 இன் இறுதியளவில் ஏற்றுமதி மானியத்தினை நீக்குவதற்கு எதிர்பார்க்கின்றன.

இலங்கையானது உலக வர்த்தக நிறுவனத்தில் சிறியதும் நலிவடைந்ததுமான பொருளாதாரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை வெளிப்படுத்துகையின் 27 ஆவது உறுப்புரையானது சிறியதும் நலிவடைந்ததுமான பொருளாதாரங்களின் தேவைகளினை நிலையானதும் அர்த்தமுள்ள வகையிலும் நிறைவு செய்வதற்கான இணக்கப்பாடுகளினை உறுதிப்படுத்துகின்றது. இதனால், இலங்கையானது அதன் வர்த்தகத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உலக வர்த்தக நிறுவனத்தினூடாக தொழில்நுட்ப மற்றும் திறன் விருத்தி உதவுகையினைக் கோருவதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளது. அத்துடன், அசைசரவை கூட்டத்தில் சிறிய பொருளாதாரங்கள் மீதான வேலை நிகழ்ச்சித்திட்டங்களின் மீள் உறுதிப்படுத்துகையானது உலக வர்த்தக நிறுவனத்தின் அபிவிருத்தி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான அபிவிருத்தியிலிருந்தான பயனுதவிக்கு மேலும் வாய்ப்பினை வழங்குகின்றது.

## 3.2 வர்த்தக கொள்கை மீளாய்வு

தேசிய வர்த்தக கொள்கைகளினை கண்காணிப்பானது உலக வர்த்தக நிறுவனம் மேற்கொள்ளும் பணிகளில் மிகவும் முக்கியமானதொன்றாகும். வர்த்தக கொள்கை மீளாய்வு பொறிமுறையானது (TPRM) அத்தகைய கண்காணிப்புப் பொறுமுறையின் மிகவும் முக்கியமான பகுதியாகும். அனைத்து உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடுகளும் உலக வர்த்தகத்தில் அதன் பங்கிற்கமைவாக வேறுபட்ட அடிப்படையில் மீளாய்வுக்குட்படுகின்றன. ஆகையால், இலங்கையின் மீளாய்வானது ஒவ்வொரு 6 வருட இடைவெளியிலும் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையின் 4 ஆவது வர்த்தக கொள்கை மீளாய்வானது 2016 நவம்பரில் மேற்கொள்ளப்படவுள்ளது. முறையான மீளாய்வினை ஆரம்பித்து அதனை நிறைவு செய்வதற்கு ஆகக்குறைந்தது 12 மாதங்களேனும் தேவைப்படும். 2015 ஆண்டு காலப்பகுதியில், தகவலைச் சமர்ப்பிக்குமாறு உலக வர்த்தக நிறுவனத்திடமிருந்து முதல்கட்ட கோரிக்கையொன்றினைப் பெற்றுள்ளதுடன் 2015 டிசம்பர் மாதத்தில், திணைக்களமானது உலக வர்த்தக நிறுவனத்திற்கு அதன் முதலாவது தகவல் தொகுதியினை சமர்ப்பித்துள்ளது.

## 3.3 இலங்கைக்கான EU GSP+ இனை௦ மீளப் பெறுதல்

இலங்கையின் தகைமை மற்றும் சாதகமான பொருளாதார சம்பாத்தியங்கள் என்பவற்றினைக் கருத்தில் கொண்டு, புதிய அரசாங்கமானது EU GSP+ வசதியினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மீள விண்ணப்பிப்பதற்கு தீர்மானித்தது. அதற்கிணங்க, EU GSP+ சலுகையினைப் பெற்றுக் கொள்வதற்கான தயாரிப்புக்களினை மேற்கொள்வதற்கு வர்த்தகத் திணைக்களத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட உப குழுவொன்று 2015 மார்ச்சில் நியமிக்கப்பட்டதுடன் 27 சர்வதேச ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தங்களின் அமுலாக்கத்திற்குப்

பொறுப்பு வாய்ந்த உரிய வரிசை அமைச்சுக்கள் அல்லது அமைச்சுக்களுடன் தொடர்ச்சியாக உசாவுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, ஐரோப்பிய ஒன்றியத்தினால் எழுப்பப்படும் பிரச்சனைகள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றினை உள்ளடக்குகின்ற வரைபு விண்ணப்பமொன்றினை இத்தகைய வரிசை முகவராண்மைகளிலிருந்து பெறப்பட்ட உள்ளீடுகளினைச் சேகரிப்பதன் மூலம், ஒரு சில மனித உரிமைகள் ஒப்பந்தங்களுக்காக, நிலுவையிலுள்ள உள்ளீடுகளுக்குட்பட்டு தயாரிக்கப்பட்டன.

அதற்கிணங்க, EU GSP+ இனை மீளப் பெறுவது தொடர்பான இரண்டு சர்வதேச ஐக்கிய நாடுகள் ஒப்பந்தங்களுக்கான உள்ளீடுகளினை நிலுவையாகவுள்ள கொண்டுள்ள வரைபு விண்ணப்பமானது விடுவிப்புக்காக 2015 நவம்பரில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

## 3.4 ஐரோப்பிய ஒன்றிய மீன் தடையினை நீக்குதல்

2015 நவம்பரில் இடம்பெற்ற இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் DG-MARE இன் தொழில்நுட்ப மதிப்பாய்வு தூதுக்குழுவானது, சாதகமான வெளிப்பாடுகளினைக் கருத்தில் கொண்டு, 2016 இன் நடுப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கான புதியதொரு வழிமுறையானது பரிந்துரை செய்யப்பட்டது.

## 3.5 வர்த்தக வசதிப்படுத்தல்

2013 பாலியில் நடாத்தப்பட்ட 9 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் எடுக்கப்பட்ட அமைச்சர்கள் மட்டத்திலான தீர்மானத்தினைத் தொடர்ந்து, உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்பினர்களினால் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையினைப் பின்பற்றுவதானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. 2015 டிசம்பரிலுள்ளவாறு, 68 நாடுகள் உடன்படிக்கையினைத் திருத்தியுள்ளதுடன் இந்தத் திருத்தமானது மூன்றில் இரண்டு உறுப்பினர்களினால் (108 உறுப்பினர்கள்) உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் சட்ட ரீதியாக அமுலுக்கு வரும். இலங்கையானது வர்த்தக வசதிப்படுத்தல் பேச்சுவார்த்தைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளதுடன் 2015 நவம்பரில் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக உடன்படிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கைச் சுங்கத்தினால் இணை தலைமை வகிக்கப்படும் வர்த்தக வசதிப்படுத்தல் மீதான தேசிய குழு மற்றும் வர்த்தக திணைக்களம் என்பன முன்மொழியப்பட்டுள்ளன. உடன்படிக்கையின்படி, வகையீடுகள் அ, ஆ மற்றும் இ வகையீடுகளின் கீழான வர்த்தக வசதிப்படுத்தல் தேவைப்பாடுகளினை இனங்காணும் பொருட்டு, உலக வர்த்தக நிறுவனமானது இலங்கையில் தேவைகள் மதிப்பிட்டு செயலமர்வு ஒன்றினை வசதிப்படுத்தியுள்ளது. மேலும், உலக வங்கி குழுவானது வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் ஒவ்வொரு உறுப்புரையின் கீழான அமுலாக்கல் விடயங்களினை இனங்காண்பதற்கு உசாவுதல் குழுவொன்றினுடாக வசதிகளினை அளித்துள்ளது. வர்த்தக வசதிப்படுத்தலின் நிறைவான அமுலாக்கமானது, அதிகமாகவுள்ள வர்த்தக கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் குறைப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் இதன்மூலம் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளின் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்கான வசதிப்படுத்தலினை அளிக்க முடியும்.

## 3.6 இலங்கையில் குவிப்பெதிர்ப்பு, எதிரீட்டு நடவடிக்கைகளினைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டவாக்கத்தினை சட்டமாக்குதல்

இலங்கையில் குவிப்பெதிர்ப்பு, எதிரீட்டு நடவடிக்கைகளினைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டவாக்கத்தினை சட்டமாக்கும் நடவடிக்கையானது நீண்டகாலமாக நிறைவேற்றப்படாதுள்ளது. 2005 மே 12 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற தீர்மானத்தின்படி, அமைச்சரவையானது பாராளுமனறத்தில் இந்தச் சட்டவாக்கம் தொடர்பான வரைபினை சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரமளித்துள்ளது. இரண்டு சட்டமூலங்கள் 2006 ஜனவரியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டாவது வாசிப்பானது 2006 ஏப்பிரலில் இடம்பெற்றது. மேற்குறித்த இரண்டு சட்டமூலங்களின் ஏற்பாடுகளின் எண்ணிக்கை குறித்துப் பாராளுமன்றத்தல் பல உறுப்பினர்களினால் வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளதுடன் இந்த விடயம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடுவதற்காக பல ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இத்தகைய ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட வினாக்களுக்கமைவாக, இரண்டு சட்ட மூலங்களின் வரைபில் பொருத்தமான திருத்தங்களினை மேற்கொள்வதற்கு சட்ட வரைஞர் திணைக்களம் தீர்மானித்தது.எவ்வாறாயினும், பாராளுமன்றமானது 2010 பெப்ரவரியில் கலைக்கப்பட்டமையினால், இரண்டு சட்ட மூலங்களும் வலுவிழந்தமையாக கருதப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, இன்னொரு அமைச்சரவை பத்திரமானது 2014 ஜூலையில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் இதனை முன்னுரிமை வாய்ந்த விடயமாக கவனத்தில் கொண்டு வரைபு சட்டவாக்கமானது நிதி திட்டமிடல் அமைச்சின் அலோசனைகள் மற்றும் அவதானங்களினைக் கருத்தில் கொண்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு குறிப்பீடு செய்யப்பட்டது. அதற்கிணங்க, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சானது புதியதொரு அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பித்துள்ளது.

## 3.7 நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியம்

நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியமானது ஐக்கிய நாடுகள் சபையின் சட்டஎல்லைக்குள் 1989 இல் தன்னியக்கமாக அரசாங்கங்களுக்கிடையிலான தாபிக்கப்பட்ட நிதி நிறுவனமாகும். இது 101 ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடுகளுடன் பத்து அரசாங்கங்களுக்கிடையிலான நிறுவனங்கள் உள்ளடங்கலான 111 தரப்புக்களின் பங்குடமையொன்றினை தாபித்துள்ளது. இலங்கையானது நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியத்தின் ஆரம்ப கால உறுப்பினராக இருப்பதால் தேயிலை, பாற் பண்ணை உற்பத்திகள், கறுவா, தும்பு, மூங்கில், இறப்பர், தெங்கு மற்றும் மீன்பிடி உற்பத்திகள் போன்ற நுகர்வுப் பொருட் துறைகளின் துறைகளிலிருந்து நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியத்திலிருந்து பயன்களைப் பெற்றுள்ளது.

நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியமானது, நுகர்வுப் பொருட் தயாரிப்பாளர்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியினை விரிவாக்குவதற்கான ஆணையின்படி, மானியங்கள், கடன்களை வழங்குவதனூடாக நுகர்வுப் பொருட் துறையில் தொழிற்பாட்டாளர்களுக்கான அதன் ஆதரவினைத் தொடர்ச்சியாக வழங்கி வருவதுடன் முழுமையாக சமூகத்தின் அபிவிருத்திக்கான அதன் பங்களிப்பினை வழங்கியும் வருகின்றது. மீளாய்வு காலப்பகுதியில், நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது, அதன் 60 ஆவது அமர்வில், இலங்கை கம்பனிகளினால் முன்வைக்கப்பட்ட இரண்டு கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த ஆண்டு காலப்பகுதியில், இலங்கைக்கான நுகர்வுப் பொருட்களுக்கான பொது நிதியத்தின் உதவு தொகையானது சலுகை வீதங்களில் 7 வருட கடன் நியதிகளின்படி, ஏறக்குறைய 2 மில்லியன் அ.டொலராகும்.

குறித்த காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது, இலங்கையின் நலன்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நுகர்வுப் பொருள் பொது நிதியத்தின் நிறைவேற்று சபையின் 60 ஆவது அமர்வில் பங்குபற்றியிருந்தது. நிறைவேற்று குழுக் கூட்டத்தில், வர்த்தக திணைக்களம் இலங்கையின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் அங்கீகாரத்தினைப் பெறுவதற்காக நிறைவேற்றுச் சபையில் சமர்ப்பித்துள்ள இலங்கையர்களின் கருத்திட்டங்களுக்கான அங்கீகாரத்தினையும் பெற முடிந்துள்ளது.

## 3.8 வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை (GSTP)

வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை தொடர்பான உடன்படிக்கையானது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் 1989 இல் தாபிக்கப்பட்டது. GSTP ஆனது தெற்கு – தெற்கு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UNCTAD) கீழ் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட தரிவு முன்னுரிமை முறைமையாகும்.

இத்திட்டத்தின் கீழ் இலங்கையானது, குறித்த ஆண்டு காலப்பகுதியில், 19.17 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பொருட்கள் மெக்ஸிக்கோவுக்கும் பெருவுக்கும் செய்துள்ளதுள்ளதுடன் இது 2015 இல் 49.57 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகரித்துள்ளது.

## 3.9 குறித்த ஆண்டு காலப்பகுதியில் EU GSP முறைமை மற்றும் ஏனைய GSP முறைமைகளில் எற்பட்ட முன்னேற்றங்கள்

### 3.9.1 EU GSP முறைமை

ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம் என்பன 2014.01.01 இலிருந்து பயனுறுதியான புதிய ஜீஎஸ்பி இக்கு அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் கீழ், இலங்கையானது புதிய திட்டத்தின் கீழ் ஜீஎஸ்பி முன்னுரிமை நியமங்களுக்கான நன்மைகளைத் தொடர்ந்தும் பெற்று வருகின்றது.

மேலும், 2014 இலிருந்து, EU GSP திட்டத்தின் குற்றுக்குப் பிராந்திய திரட்சியின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கையானது உற்பத்தி செய்யப்படாத புகையிலையினைத் ஒன்றுதிரட்டுவதற்கான உரித்துடமையினைக் கொண்டுள்ளதுடன், இந்தோனேசியாவில் உற்பத்தி செய்யப்பட்ட 2401 எச்எஸ் தலைப்பினை மறுதலிக்கும் புகையிலையினை சுருட்டுத் தயாரித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அவற்றினை உரித்துடமையினையுங் கொண்டுள்ளது.

### 3.9.2 US GSP முறைமை

2013 ஜூலை 31 ஆம் திகதியன்று வலுவிழந்த The US GSP நிகழ்ச்சித்திட்டமானது, 2015 ஜூன் 29 ஆம் திகதியன்று சட்டவாக்கமாக சட்டமாக்கப்பட்டு 2017 டிசமர்பர் 31 வரையில் முன்னுரிமைகளின் பொதுவான முறைமை என மீளவும் அதிகாரமளிக்கப்பட்டது. சட்டமூலமானது, 2013 ஜூலை 31 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பிற்தேதியிடப்பட்டதுடன் ஜீஎஸ்பி நன்மைகளுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

### 3.9.3 ஜப்பானிய ஜீஎஸ்பி முறைமை

ஜப்பான் தற்காலிக தரிவு அளவீடுகள் சட்ட வலுவாக்கலுக்கான கட்டளைச் சட்டத்தின் திருத்தத்தின் அடிப்படையிலான முன்னுரிமைகளின் பொதுவான முறைமையின் கீழ் முன்னுரிமை மூலவிதிகளின் இலகுவாக்கலினை அதிகாரபூர்வமாக அறிவிக்கின்றது

பொருட்கள் (ஒற்றைச் செயல்முறை விதி), துணிகளிலிருந்து தயாரிக்கப்படுகின்ற போது பொருட்களின் மூலத்தன்மையினைக் கொண்டுள்ளதாக தகைமையினைப் பெறுகின்ற இசைவுக்குட்பட்ட முறைமையின் (தைத்த ஆடை மற்றும் ஆடை துணைப் பொருட்கள், முடிச்சுப் போட்ட அல்லது பின்னிய அத்தியாயம் 61 இல் திருத்தங்களுடன், வகைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. இது 2015 ஏப்பிரல் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கையானது ஜீஎஸ்பி திட்டங்களின் எண்ணிக்கையின் கீழ் 3110.3 மில்லியன் அ.டொலர் பெறுமதியுடைய பொருட்களினை ஏற்றுமதி செய்துள்ளது. EU-GSP திட்டத்தின் கீழ் 68% மானவை ஐக்கிய அமெரிக்கா, சிஜஎஸ், ஜப்பான், கனடா, அவுஸ்திரேலிய ஜீஎஸ்பி திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்டன.

# 4. இருதரப்பு வர்த்தகமும் பொருளாதார ஒத்துழைப்பும்

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கையானது அதன் பிரதான வர்த்தக பங்காளி நாடுகளுடனும் அவ்வாறே ஏனைய நாடுகளுடனும் இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றினை மேம்படுத்துவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், வியட்னாம், தாய்லாந்து, கொரிய குடியரசு ரஷியா மற்றும் முன்னயை சோவியத் ஒன்றிய நாடுகள், ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியம் என்பவற்றுடனான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்துள்ளன. மீளாய்வு காலப்பகுதியில், இலங்கையானது, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் கைச்சாத்திட்டுள்ள இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (FTA) மற்றும் சீனாவுடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் என்பவற்றின் கீழ் அதன் வர்த்தக நலன்கள் குறித்து சமமான முக்கியத்துவத்தினை வழங்கியுள்ளது.

## 4.1 இந்தியாவுக்கான சந்தை அணுகுமுறையினை மேம்படுத்தவதற்கான பேச்சுவார்த்தைகள்

### 4.1.1 இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

1998, டிசம்பர் 28 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு 2000, மார்ச் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்த இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இரண்டு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தில் பரந்தளவிலான பொருட்களுக்கு தீர்வை விலக்களிப்பினை வழங்கி வருகின்றது. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது 2008 நவம்பரிலிருந்து முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் சுங்கத் தீர்வையின்றி இந்திய சந்தைக்கு 4000 இற்கும் அதிகமான உற்பத்தி வரிசைகளை ஏற்றுமதி செய்ய முடிந்துள்ளது.

2015 இல் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி 643 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளதுடன் ISFTA இன் கீழ் 407.2 மில்லியன் அ.டொலர் பெறுமதியானவை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இலங்கை ஏற்றுமதிகளின் நியதிகளின்படியான இருதரப்பு உடன்படிக்கையின் 63% பயன்பாட்டினைக் குறிப்பிடுகின்றது. மொத்த ஏற்றுமதிகளில் 2.9% அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ISFTA ஏற்றுமதிகள் 8.4% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகளின் பெறுமதி 4,273 மில்லியன் அ.டொலர்களாக இருந்துள்ளதுடன் ISFTA இன் கீழ் 253.4 மில்லியன் அ.டொலராகவும் (6%) இருந்துள்ளதுடன் மொத்த இறக்குமதிகளில் 7.4% அதிகரிப்பினையும் பதிவு செய்துள்ள அதேவேளையில், 2014 ஆம் ஆண்டின் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் ISFTA இன் இறக்குமதிகள் 53.1% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளன.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான மொத்த வர்த்தகமானது கடந்த ஆண்டுக்கெதிராக 6.8% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளதுடன் அதன் பெறுமதி 4,916 மில்லியன் அமெரிக்க டொலராகும். இலங்கை மீதான வர்த்தக மீதியின் பாதகப் போக்கானது, கடந்த காலப்பகுதியில்

8.3% இனால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், உடன்படிக்கையின் கீழான வர்த்தக மீதியானது இலங்கைக்குச் சாதகமாகவே எப்போதும் இருந்துள்ளதுடன் 2015 ஆம் ஆண்டுக்கான அதன் பெறுமதி இலங்கையின் 153.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்த அதிகரிப்பானது, இந்திய ஏற்றுமதியாளர்களுக்கதிராக (6%) இலங்கை ஏற்றுமதியாளர்களினால் (63%) ISFTA இன் அதிகரித்த பயன்பாட்டினைக் குறிப்பதுடன் இந்திய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் போது இலங்கை ஏற்றுமதியாளர்களினால் உயர்ந்தளவிலான வரிச் சலுகைகள் அனுபவிக்கப்படுவதனையும் காண முடிகின்றது.

## 4.1.2. இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் வர்த்தக செயலாளர் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள்

இந்திய மற்றும் இலங்கைக்கிடையிலான 3 ஆவது வர்த்தக செயலாளர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் 2015 மார்ச் 4 ஆம் திகதியன்று கொழும்பில் நடாத்தப்பட்டது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் அமுலாக்கம் மற்றும் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளில் இருதரப்பு உறவுகளினை விருத்தி என்பனவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் தொழில்நுட்ப மட்டத்திலான கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இந்திய தரப்பின் ஆலோசனைப்படி, இலங்கையானது ISFTA உடன் தொடர்புடைய விடயங்களினை தொகுப்பதற்கு உடன்பட்டுக் கொண்டதுடன் உரிய வரிசை அமைச்சுக்களுடன் ஆலோசனை செய்து அவற்றினை ஆய்வு செய்வதற்காக இந்திய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதற்கும் உடன்பட்டுக் கொண்டது.

4 ஆவது வர்த்தக செயலாளர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் புதுடில்லியில் 2015 டிசம்பர் 21 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தைகளில், உத்தேச பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. 2015 ஜுலையில் இலங்கையினால் சமர்ப்பிக்கப்பட்ட NTM ஆவணத் தொகுப்பிற்கு பதிலளிக்கும் வகையில், இந்திய தரப்பினால் முரண்படாத வகையில் ஆனால் வித்திரைத்த விடயங்களினை ஆய்வு செய்வதற்கு உடன்பட்ட ஏற்புடையதான தேசிய ஒழுங்குவிதிகள் பற்றி விளக்கமளக்கப்பட்டது. இலங்கை தரப்பானது இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கான புதிய வழியினைக் கண்டறியக் கூடிய நியமங்கள், ஒழுங்குவிதிகள், உற்பத்தி நாட்டுச் சான்றுப்படுத்தல்கள் மற்றும் ஏனைய நாட்டு விதித்துரைத்த தகவல்களை மேம்படுத்துவதற்கு ஏற்றுமதியாளர்கள் / அதிகாரிகளுக்காக இலங்கையில் செயலமர்வுகளை நடாத்துவதற்கான இந்தியாவின் கோரிக்கையினை வரவேற்றுள்ளது. இலங்கை தரப்பானது, தும்பு மற்றம் கொகோ புல்கரி கைத்தொழில், இலகுபொறியியல் பொருட்களின் தயாரிப்பு, தகவல் மற்றுறம் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்துறை மற்றும் தவாகனங்கள் மற்றும் மருந்தாக்கல் கைத்தொழில் போன்ற துறைகளில் உதவியினைக் கோரியுள்ளது.

## 4.2. பாகிஸ்தானுக்கான சந்தை அணுகுமுறையினை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள்

### 4.2.1 பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)

2005 ஜீன் 12 ஆம் திகதியிலிருந்து செயற்பாட்டுக்கு வந்த பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு வர்த்தகத்தின் பெறுமதியானது கணிசமானளவு மேம்பாட்டினை அடைந்துள்ளது. பாகிஸ்தான் ஆனது, இந்தியாவினால் தலைமை வகிக்கப்படும் சார்க் பிராந்தியத்தில் இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக இருந்து வந்துள்ளது. பாகிஸ்தானுக்கான இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளினுள் மிளகு, மரக்கறி உற்பத்திகள், பீடி, இலைகள், வெற்றிலை, தேங்காய் சிரட்டைகள், இயற்கை இறப்பர், தெங்கு மற்றும் புத்தம் புதிய மற்றும் உலர்ந்த மரமுந்திரிகை பருப்புக்கள் என்பனவும் உள்ளடங்குகின்றன. PSFTA இன் அமுலாக்கலின் பின்னர் பாகிஸ்தானிய சந்தைக்கு புதிய உற்பத்திப் பொருட் தொகுதியொன்று ஊடுருவியுள்ளதுடன் அவை தைத்த ஆடைகள், MDF பலகைகள், பிஸ்கற்கள், புதிய அன்னாசி, விளையாட்டு பொருட்கள், புளி, உண்ணக்கூடிய எண்ணெய், பீங்கான் மேசைப் பொருட்களும் சமயலறைப் பொருட்களும், பீங்கான் தரை ஓடுகள், தளபாடம், மின்சார ஆளிகளும் சொக்கற்றுக்களும், மூலிகை அழகு சாதன பொருட்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள், வர்ணங்கள், கண்ணாடி சித்திரங்கள், தோல் உற்பத்திப் பொருட்கள், குளிரூட்டப்பட்ட மீன், இறால் வகை, கணவாய், நண்டு, வெட்டுப் பூக்கள் மற்றும் இலைத் தொகுதி, இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் மற்றும் அலங்கார மீன் போன்றவற்றினை உள்ளடக்குகின்றன.

2004 இல் 147 மில்லியன் அ.டொலராக இருந்த இரண்டு நாடுகளுக்குமிடையிலான மொத்த வர்த்தகத்தின் பெறுமதியானது 2015 இல் 370 மில்லியன் அ.டொலருக்கு அதிகரித்துள்ளது. 2004 இல் 39 மில்லியன் அ.டொலரில் இருந்த பாகிஸ்தானுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி 2015 இல் 73 மில்லியன் அ.டொலருக்கு அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த ஏற்றுமதியின் பெறுமதியானது கணிசமானளவு வீழ்ச்சியினைக் (1.7%) காட்டியது. இலங்கை எற்றுமதியாளர்களின் பாகிஸ்தானுடனான இருதரப்பு உடன்படிக்கையின் மூலமான பயன்பாடானது ஏறக்குறைய 80% ஆக இருந்துள்ளதுடன் குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதிப் பெறுமதியானது 58.8 மில்லியன் அ.டொலராக (உடன்படிக்கையின் கீழ்) இருந்துள்ளது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளின் பெறுமதி 297 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளதுடன் PSFTA இன் கீழான ஏற்றுமதிகள் 42.76 மில்லியனாக (14.4%) இருந்துள்ள அதேவேளையில் மொத்த இறக்குமதிகளில் 6.2% சதவீத கணிசமான அதிகரிப்பினையும் பதிவு செய்துள்ளது. 2014 இல் பதிவு செய்யப்பட்ட பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் PSFTA இன் கீழ் 46% வீழ்ச்சியினையும் பதிவு செய்துள்ளது.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான மொத்த வர்த்தகமானது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.6% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. இலங்கையின் பாதக வர்த்தக மீதியும் 9.1% இனால் அதிகரித்தது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்குச் சாதகமாக இருந்த உடன்படிக்கையின் கீழான வர்த்தக மீதியானது தற்போது இலங்கைக்குச் சாதகமாக வந்துள்ளதுடன் பாகிஸ்தானிய எற்றுமதியாளர்களுக்கெதிராக (14.4%) இலங்கையின்

ஏற்றுமதியாளர்களினால் (80.6%) PSFTA இன் பயன்பாடு அதிகரித்துள்ளமையினையும் இங்கு காண முடிந்துள்ளதுடன் பாகிஸ்தானிய சந்தைக்கு ஏற்றுமதி செய்யும் போது இலங்கை ஏற்றுமதியாளர்களினால் அதிகளவிலான வரிச் சலுகைகளும் அனுபவிக்கப்பட்டன.

### 4.2.2 2015 நவம்பர் 10 – 11 வரையிலான பாகிஸ்தானிய சமஸ்டி கௌரவ வர்த்தக அமைச்சரின் இலங்கைக்கான விஜயம்

2016 ஜனவரி இலங்கைக்கான பாகிஸ்தானிய கௌரவ பிரதம மந்திரி அவர்களின் விஜயத்திற்க முன்னதாக, பாகிஸ்தானிய வர்த்தக சமஸ்டி அமைச்சர், கௌரவ. பிரதம மந்திரி அவர்களின் விஜயத்திற்கான ஏற்பாடுகளினை மேற்கொள்ளும் பொருட்டு தனியார் துறை தூதுக்குழுவொன்றுடன் (மருந்துப் பொருட்கள், உணவு, சீமெந்து) இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

வர்த்தக திணைக்களமானது, பாகிஸ்தானிலுள்ள வியாபார வாய்ப்புக்களினை வெளிப்படுத்தும் பொருட்டு விஜயம் செய்த கௌரவ. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் முன்னிலையில் இலங்கை வர்த்தக சமூகத்தின் பங்குபற்றுதலுடன் நவம்பர் 11 ஆம் திகதியன்று “பாகிஸ்தானில் வியாபார வாய்ப்புக்கள்” எனும் தலைப்பிலான இலங்கை – பாகிஸ்தானிய வியாபார அமர்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

மேற்குறித்த அமர்வுக்குச் சமாந்தரமாக இலங்கை முதலீட்டுச் சபையானது, கௌரவ இலங்கை சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் அவர்களின் சமூகமளித்தலுடன் இலங்கையில் வியாபார வாய்ப்புக்கள் தொடர்பில் பாகிஸ்தானிய வியாபார தூதுக்குழுவுடன் இருதரப்பு அமர்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

அத்தகைய கருத்தரங்குகளுக்கு மேலாக, வர்த்தக திணைக்களமானது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுடன் இணைந்து, வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பில் தற்போதிருக்கின்ற பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடும் பொருட்டு இருதரப்பு கூட்டமொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. இக்கூட்டத்தில், கௌரவ பாகிஸ்தானிய வர்த்தக அமைச்சர், பாகிஷ்தானிய வர்த்தக சமூகமானது இலங்கையில் சீனி, சீமெந்து, மருந்தாக்கல் பொருட்கள், உணவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிருமாணத் துறைகளில் முதலீடு செய்வது குறித்த தங்களின் விருப்பத்தினைதை தெரிவித்திருந்தனர்.

## 4.3 புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளினை மேற்கொள்ளுதல்

### 4.3.1 *சீன மற்றும் இலங்கையுடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை*

2013 இல் சீனாவுக்கு அதிமேதகு இலங்கை ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட வேளையில், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான முன்மொழிவு குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளினை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையானது 2013 மே இல் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கும் சீன வர்த்தக அமைச்சுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது.

முன்னணி முகவராண்மையாக, இலங்கையின் நிதி அமைச்சானது, நிதி அமைச்சின் முன்னாள் செயலாளரின் தலைமையில் இலங்கையின் சார்பில் பேச்சுவார்த்தைகளினை

முன்னெடுத்துள்ளது. அதற்கிணங்க, திறைசேரியின் பிரதி செயலாளரின் தலைமையின் கீழ் வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவொன்று தாபிக்கப்பட்டது.

வர்த்தக பணிப்பாளர் நாயகம் உள்ளடங்கலான வர்த்தக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டதுடன் ஏனைய அமைச்சுக்களிலிருந்தான அதிகாரிகள் மற்றும் இரண்டு தனியார் துறை பிரதிநிதிகள் ஆலோசகர்களாக குழுவில் உள்ளடக்கப்பட்டார்கள். இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 2015 ஜனவரியின் இறுதியில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையானது பிற்போடப்பட்டுள்ளது.

சீனாவுடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது பொருட்களின் வர்த்தகம், சேவை வர்த்தகம், முதலீடு, சுங்க ஒத்துழைப்பு, வர்த்தகத்துக்கான தொழில்நுட்ப தடைகள், சுகாரதார நலன் பேணல் மற்றும் சுகாதார நலன் பேணல் நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு முறைகள் என்பனவற்றினையும் உள்ளடக்குகின்றது. அற்கிணங்க, சீனாவுனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது விரிவான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றாக கருதப்பட வேண்டியுள்ளது.

சீனாவுடனான முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் சீன ஜனாதிபதியின் வருகையின் போது கொழும்பில் நடாத்தப்பட்டது. இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நவம்பர் , 2014 இல் பெய்ஜிங், சீனாவில் நடைபெற்றது

மூனாறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2016 இல் ஜூனில் கொழும்பில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 4.4 கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்களுக்களின் பேச்சுவார்த்தைகள் (JEC)

இலங்கையின் இரு தரப்பு வர்த்தக உறவுகளினைப் பொறுத்த வரையில், வர்த்தக திணைக்களமானது, முக்கிய வர்த்தக பங்காளர்களுடன் இணைந்து தாபித்த வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு ஆணைக்குழுக்களுக்கான கேந்திர நிலையமாக வர்த்தக திணைக்களம் தொழிற்பட்டு வருகின்றது. வர்த்தக திணைக்களமானது, ட்டு ஆணைக்குழுக்களின் தீர்மானங்களினை வகுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அமுலாக்கல் நிலையிலிருந்து கூட்டு ஆணைக்குழுக்களின் கீழான இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளினை நடாத்துவதற்குத் தேவையான அனைத்து தொழிற்பாடுகளினையும் நிறைவேற்றி வருகின்றது. இத்தகைய கூட்டு ஆணைக்குழு உடன்படிக்கைகள் இத்தகைய நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளினை விருத்தி செய்வதற்கும் விரிவாக்குவதற்குமான வசதிகளினை ஏற்படுத்துக் கொடுத்துள்ள அதேவேளையில் வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான ஊக்குவிப்பினையும் வழங்கியுள்ளன.

இத்தகைய ஆணைக்குழுக்களின் நோக்கெல்லைகள் வர்த்தகம், வங்கி, கப்பல்துறை, கல்வியில் ஒத்துழைப்பு, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் வேலைவாய்ப்பு போன்ற துறைகள் வரையில் பரந்துபட்டுள்ளன. இலங்கையின் வர்த்தக ஊக்குவிப்புக்கான பங்களிப்பினை வழங்குவதற்கு அப்பால் இது தொடர்பில், பங்குபற்றும் நாடுகள் மற்றும் அவற்றிற்குரிய அரச மற்றும் தனியார் துறை முகவராண்மைகளுக்கிடையிலும் பரஸ்பர புரிந்துணர்வினையும் ஒத்துழைப்பினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேகொள்ளப்பட்டன.

வர்த்தக திணைக்களமானது, அமைச்சர்கள் மட்டத்தில் நடாத்தப்பட்ட பின்வரும் இருதரப்பு கூட்டு ஆணைக்குழுக்கள்/ குழுக்களின் கீழான வர்த்தகத்துடன் தொடர்புடைய விடயங்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகும்.

- இலங்கை – பங்களாதேஸ்
- இலங்கை – பெலாரஸ்
- இலங்கை – எகிப்து
- இலங்கை – ஈரான்
- இலங்கை – ஈராக்
- இலங்கை – குவைற்
- இலங்கை – பாகிஸ்தான்
- இலங்கை – கட்டார்
- இலங்கை – ரோமானியா
- இலங்கை – ரஷியா
- இலங்கை – சுவாசிலாந்து
- இலங்கை – துருக்கி

மேற்குறிப்பிடப்பட்ட கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்களுக்கு மேலதிகமாக, வர்த்தக திணைக்களமானது பின்வரும் இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கான கேந்திர மையமாகவும் விளங்குகின்றது.

- இலங்கை மற்றும் ஜப்பானுக்கிடையில் அரசாங்கங்களுக்கிடையிலான பொருளாதார கொள்கை கலந்துரையாடலுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- ஐக்கிய அமெரிக்காவின் கீழான கூட்டு ஆணைக்குழு – இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டரீதியான உடன்படிக்கை (TIFA)
- இலங்கை மற்றும் பங்களாதேஸுக்கிடையிலான வர்த்தகம் தொடர்பான கூட்டு தொழிற்படு குழு
- இலங்கை மற்றும் தாய்லாந்துக்கிடையிலான வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான உப குழு.
- இலங்கை மற்றும் வியட்னாமுக்கிடையிலான வர்த்தகம் மீதான உப குழு (SCT)
- இலங்கை மற்றும் கென்யாவுக்கிடையிலான கூட்டு வர்த்தக குழு

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது 2015 இல் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு பேச்சுவார்த்தைகளினை ஒருங்கிணைக்கவோ கூட்டங்களைக் கூட்டவோ இல்லை. அவை 2016 இற்கு ஒத்திவைக்கப்பட்டன. எவ்வாறாயினும், வர்த்தக திணைக்களமானது இலங்கை – சீனா கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு உள்ளடங்கலாக ஏனைய வரிசை அமைச்சுக்களினால் நடாத்தப்பட்ட கூட்டுப் ஆணைக்குழுப் பேச்சுவார்த்தைகளில் ஆர்வத்துடன் பங்குபற்றியது.

## 4.4.1 இலங்கை மற்றும் வியடனாமுக்கிடையிலான வர்த்தகம் தொடர்பான உப குழுவின் முதலாவது கூட்டம் (SCT)

வியட்னாம் மற்றும் இலங்கைக்கிடையிலான வர்த்தகம் தொடர்பான உப குழுவின் முதலாவது கூட்டம் பரஸ்பர நலன்களின் அடிப்படையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்திஅவிருத்தி செய்யும் நோக்குடன் 2015 மார்ச் 26 ஆம் திகதியன்று, இலங்கை கொழும்பில் நடாத்தப்பட்டது. இலங்கைத் தூதுக்குழுவுக்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.எஸ்.மியன்வலவும் வியட்னாமிய தூதுக்குழுவுக்கு வியட்னாமிய கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் பிரதி அமைச்சர் அதிமேதகு திரு.ஹோங் குவாக் அவர்களும் தலைமை தாங்கினார்கள். தொழில்நுட்ப அமர்வானது தென் மேற்கு ஆசிய மற்றும் ஆபிரிக்க அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம், வியட்னாமிய கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் இலங்கை வர்த்தகப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் இணைத் தலைமை தாங்கப்பட்டது.

தொழில்நுட்ப அமர்வில், வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான உறவுகள் மற்றும் மீன்பிடித்துறையில் ஒத்துழைப்பு, கைத்தொழில் ஒத்துழைப்பு, சுங்க ஒத்துழைப்பு மற்றும் இரண்டு நாடுகளின் ஏற்றுமதி ஊக்குவிப்பு முகவராண்மைளுக்கிடையிலான உறவுகள் என்பவற்றினை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்பட்டது.

## 5. பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கையானது அதன் பிராந்திய வர்த்தகம் மற்றும் APTA, SAPTA, SAFTA, BIMSTEC மற்றும் IORA எனும் பெயருடைய பொருளாதார ஏற்பாடுகளில் தொடர்ந்தும் பிரதான பாத்திரத்தினை வகித்து வருகின்றது.

### 5.1 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை தொடர்பான (APTA) பேச்சுவார்த்தைகளினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல்

1975 கைச்சாத்திடப்பட்டு முதலாவது பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது (APTA) 2005 நவம்பர் 2 அம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் வரிச் சலுகைகள் தொடர்பான மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அது 2006 செப்ரெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

இலங்கையானது 2015, மார்ச், ஜூலை மற்றும் டிசம்பரில் முறையே சியோல் - தென்கொரியா, பாங்கொக், தாய்லாந்தில் நடாத்தப்பட்ட மூன்று நிலையியல் குழுக் கூட்ட அமர்வுகளில் வெற்றிகரமாக பங்குபற்றியது. உறுப்பு நாடுகள் தாய்லாந்து பாங்கொக்கில் 2016 ஏப்பிரலில் நடாத்தப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள APTA அமைச்சர்கள் மட்டத்திலான பேரவையின் 4 ஆவது அமர்வில் APTA இன் கீழான 4 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளினை நிறைவு செய்வதற்கு தீர்மானித்துள்ளன.

நிலையியல் குழுக் கூட்டங்களில் கவனத்தில் கொள்ளப்படும் பிரதான விடயங்களினுள் வரிச் சலுகைகள் மீதான கலந்துரையாடல்கள், மூலவிதிகளைத் தளர்த்துதல், வர்த்தக வசதிப்படுத்தல், முதலீடு மற்றும் சேவைகள் மீதான சட்டரீதியான உடன்படிக்கையின் அமுலாக்கதிற்கான முன்னெடுப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் உள்ளடங்கியிருந்தன.

APTA வியாபார கருத்தரங்கு APTA நிலையியல் குழுவின் 45 ஆவது அமர்வுக்கு சமாந்தரமாக நடாத்தப்பட்டது. இந்தக் கருத்தரங்கின் பிரதான நோக்கம் APTA இன் எதிர்கால திட்டமிடலினை மேலும் விருத்தி செய்வது தொடர்பில் APTA தனியார் துறையினருக்கிடையே நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதாக அமைந்திருந்தது.

மீளாய்வு காலப்பகுதியில் இலங்கையானது APTA இன் கீழ்118.69 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 75% மானவை சினாவுக்கும் 23.6% மானவை தென் கொரியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. எவ்வாறாயினும், APTA இன் கீழான இலங்கையின் இறக்குமதிகள் 15.43 மில்லியனை அமெரிக் டொலரினைப் பதிவு செய்துள்ளதுடன் அவற்றுள் சீனாவிலிருந்து 88% மும் இந்தியாவிலிருந்து 12% மும் பதிவு செய்துள்ளன.

## 5.2 தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் (SAFTA) கீழான பேச்சுவார்த்தைகளினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல்

தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA) 2004 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டு 2006 ஜனவரியிலிருந்து அமுலுக்கு வந்தது. தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA)ஆனது 1995 இல் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் (SAPTA) தாபித்தலுடன் ஆரம்பித்த முன்னுரிமை வர்த்தக ஊக்குவிப்பினூடாக பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை மேலும் விரிவாக்குவதனை நோக்காகக் கொண்டது.

2016 ஆம் ஆண்டளவில் பத்து வருடத்தில் பூர்த்தி செய்யப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள SAFTA இன் வர்த்தக சுதந்திரமளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நெகிழ்வுப் பட்டியலில் இல்லாத பிராந்தியத்திலிருந்தான உற்பத்திப் பொருட்கள் மீதான சுங்கத் தீர்வைகள், படிப்படியாகக் குறைக்கப்படும். இலங்கையானது 2015 நவம்பர் 21 இலிருந்து அமுலாகும் வகையில் வர்த்தக சுதந்நதிரமளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் அதன் தரிவு விடுதலை இணக்கப்பாட்டினை பூர்த்தி செய்து கொண்டது.

வர்த்தக சுதந்திர நிகழ்சித்திட்டத்தின் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன் அனைத்து உறுப்பு நாடுகளினாலும் அமுல்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டத்தின் கீழ், உறுப்பினர்கள் அவர்களின் ஆரம்ப நெகிழ்வுப் பட்டியல்களில் ஆகக்குறைந்தது 20% குறைப்புக்கு உடன்பட்டுக் கொண்டார்கள். இத்தகைய உற்பத்திகள் மீதான சுங்கத் தீர்வையின் சீரான குறைப்பானது நெகிழ்வுப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதுடன், இது 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்படவதற்கு அட்வணைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கை அதனை 2018 இல் பூர்த்தி செய்தல் வேண்டும்.

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில், SAFTA மற்றும் பிராந்தியங்களுக்கிடையிலான வர்த்தகம் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக மூன்று உத்தியோகபூர்வ மட்டத்திலான கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இக்கூட்டத்தில் மூல விதிகளின் உறுதிப்படுத்தலுடன் தொடர்புடைய பொறிமுறையினை வகுத்தல், பிராந்தியங்களுக்கிடையிலான வர்த்தகத்தினை விரிவாக்குவது தொடர்பில் வரி விடுதலையினை மேற்கொள்ளுதல் மற்றும் SAFTA இற்கான நோக்கினை நிறைவு செய்தல் போன்ற மூன்று பிரதான விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டன.

சப்ராவின் கீழான இலங்கையின் எற்றுமதிகள், மீளாய்வு காலப்பகுதியில் 15.4 மில்லியனாக இருந்துள்ளதுடன், 2014 இல் 22% இற்கு மேற்பட்ட அதிகரித்த பெறுமதியினைப் பதிவு செய்துள்ளதுடன் இதில் 95% மானவை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. எவ்வாறாயினும், ந்த உடன்படிக்கையின் கீழான இறக்குமதிகள் வழக்கம் போல் மிகவும் குறைவாகவும் புறக்கணிக்கத்தக்கதாகவும் இருந்துள்ளது. எவ்வாறாயினும், ஏற்றுமதிகள் தற்போதும் SAPTA இன் கீழ் பதிவு செய்யப்படுவதுடன் SAFTA இற்கு முன்னதாக 2.9 மில்லியன் தொகையினைக் கொண்டிருந்தது.

சார்க் நாடுகளுக்கான இலங்கையின் எற்றுமதிகளில் 80% இற்கும் அதிகமானவற்றினைக் கொண்டிருக்கின்ற சார்க் பிராந்தியத்திலுள்ள எமது பிரதான வர்த்தக பங்காளிகளாகிய இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினைக் கொண்டிருக்கின்ற அதே நாடுகளுக்கு தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான கீழ் ஏற்றுமதிகள் ஓட்டம் சாத்தியமானது அல்ல.

## 5.3 புதிய பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மீதான பேச்சுவார்த்தைகள்

### 5.3.1 பல் துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா ஆரம்பிக்குகை (BIMSTEC)

பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மியான்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகளினைக் கொண்டுள்ள பல்துறை தொழில்நுட்ப மற்றும்பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா ஆரம்பிக்குகையானது அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகளினை விரிவாக்குவதனையும் பிராந்தியங்களுக்கிடையில் சிறந்த பொருளாதார உறவுகளை தாபிப்பதனையும் நோக்காக கொண்டுள்ளது.

மூன்றாவது பிம்ஸ்ரெக் மாநாடு, 14 ஆவது பிம்ஸ்ரெக் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு மற்றும் 16 ஆவது பிம்ஸ்ரெக் சிரேஸ்ட அதிகாரிகளின் கூட்டம் என்பன மியான்மார், நே பியி ரோ இல் மார்ச் 1 - 4 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டது.

அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில், அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் பிம்ஸ்ரெக்கிலுள்ள முன்னுரிமை விடயங்களின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்துள்ளதுடன் பின்வரும் ஆவணங்களில் அவர்கள் கையெழுத்திடுவதற்கான தமது சம்மதத்தினையும் தெரிவித்துள்ளார்கள்;

- பிம்ஸ்ரெக் நிரந்தர செயலகத்தினை தாபிப்பது தொடர்பான அமைப்பு அகவிதி
- பிம்ஸ்ரெக் கலாச்சார கைத்தொழில்கள் ஆணைக்குழு மற்றும் பிம்ஸ்ரெக் கலாச்சார கைத்தொழில் அவதானிப்பு நிலையமொன்றிதை தாபிப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை
- வானிலை மற்றும் காலநிலைக்கான பிம்ஸ்ரெக் நிலையமொன்றினைத் தாபிப்பது தொடர்பில் பிம்ஸ்ரெக் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான அமைப்பு அகவிதி

சிரேஷ்ட அதிகாரிகளின் கூட்டத்தில், அடுத்த வர்த்தக மற்றும் பொருளாதார அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தின் போது பின்வரும் உடன்படிக்கைகளினைக் கைச்சாத்திடுவதற்கு உடன்பாடு காணப்பட்டது;

- பிம்ஸ்ரெக் சுதந்திர வர்த்தக பிரதேசம் (FTA) மீதான சட்ட ரீதியான உடன்படிக்கையின் பொருட்களின் வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை
- பிம்ஸ்ரெக் சுதந்திர வர்த்தக பிரதேசம் மீதான சட்ட ரீதியான உடன்படிக்கையினைத் திருத்துவதற்கான மரபுச் சீர்முறைமை
- பிணக்குத் தீர்வு நடைமுறைகள் மற்றும் சட்டரீதியான உடன்படிக்கை மீதான பொறிமுறைமை மீதான உடன்படிக்கை
- சுங்க விடயங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவுகை தொடர்பான உடன்படிக்கை

இலங்கையின் சுதந்திர வர்த்தக நிகழ்ச்சித்திட்டமானது (TLP), உறுப்பு நாடுகளினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்புக்கமைவாக, அக்கறைதார்ர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வகுக்கப்பட்டது.

இலங்கையின் சுதந்திர வர்த்தக நிகழ்ச்சித்திட்டத்துக்கான கட்டமைப்பு பின்வருமாறு:

| அட்டவணை | தரிவு வரிசைகளின் எண்ணிக்கை | % | குறைவிருத்தியல்லா நாடுகளுக்கானவை | குறைவிருத்தி நாடுகளுக்கானவை |
|---|---|---|---|---|
| வரைவான சுவட்டு நீக்குகை (FTE) | 505 | 10% | 4 சமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் | 2 சமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் |
| சாதாரண சுவட்டு நீக்குகை (NTE) | 2,422 | 48% | 2 ஆவது வருடத்திலிருந்து, 6 சமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் | 2 ஆவது வருடத்திலிருந்து 4 சமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் |
| சாராண சுவட்டு கழிப்பனவு (NTR - 1% to 5%) | 960 | 19% | 2 ஆவது வருடத்திலிருந்து 6 சமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் | 2 ஆவது வருடத்திலிருந்து 4 சமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் |
| பாதகப் பட்டியல் (NL) | 1,165 | 23% | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

இலங்கையின் வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டத்திற்கான அமைச்சரவை அங்கிகாரம் 2016 பெப்ரவரியில் பெறப்பட்டது.

பிம்ஸ்ரெக் வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவின் 20 ஆவது கூட்டம் 2015 செப்ரெம்பர் 7-9 வரையில் தாய்லாந்தில் நடாத்தப்பட்டது. மியான்மாரில் 2014 மார்ச்சில் நடாத்தப்பட்ட 3 ஆவது பிம்ஸ்ரெக் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கிணங்க, BIMSTEC FTA இன் பொருட்கள் சேவைகள் மீதான உடன்படிக்கையானது நிறைவு செய்யப்பட்டது. இந்தியாவானது 4 வருடங்களின் பின்னர் தாம் இந்த உடன்படிக்கையினை 4 வருடங்களின் பின்னர் ஏற்றுக் கொண்டுள்ளமையினால் உற்பத்திப்பொருள் விதித்துரைத்த சட்டவிதிகளின் நிரலினை (PSRs)மீளாய்வு செய்யுமாறு வலியுறுத்தியமையின் காரணமாக TIG இன் வரைபினை நிறைவு செய்ய முடியவில்லை.

மேலும், “முதலீடு” மற்றும் ”சேவைகள்” மீதான தொழிற்படு குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

## 5.3.2 இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பு (IORA)

இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பானது (IORA), அரசாங்கம், வியாபாரம் மற்றும் கல்விசார்ந்த குழு என முப்பிரிவுகளைக் கொண்டதும் அவற்றிற்கிடையேஒத்துழைப்பினையும் நெருங்கிய தொடர்பினையும் பேணி வருகின்ற இந்து சமுத்திர கரையோர நாடுகளுக்கிடையலான பிராந்திய கூட்டமைப்பாகும். வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழு (WGTI), இந்து சமுத்திர கரையோரக் கூட்டமைப்பு (IORBF), மற்றும் இந்து சமுத்திர கரையோர கல்விசார்ந்த குழு (IORAG) எனும் பெயரிலான அக்கறைதார்களின் குழு தொடர்பில் மூன்று தொழிற்படு குழுக்கள் இருந்துள்ளன. (i) கடற் பயண பாதுகாப்பு (ii)வர்த்தக மற்றும் முதலீட்டு வசதிப்படுத்தல், (iii) மீன்பிடி முகாமைத்துவம், (iv) பேரிடர் முகாமைத்துவம், (V) கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (vi) சுற்றுலா மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள் (vii) இன வலுவூட்டல் (vii) நிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காகவும் பிராந்தியம் மற்றும் அங்கத்துவ நாடுகளின் மீதியாயுள்ள அபிவிருத்தி மற்றும் பிராந்திய பொருளாதார

ஒத்துழைப்புக்காக பொது அமைப்பொன்றினை உருவாக்குதல் போன்றன IORA இனால் முன்னுரிமை வாய்ந்த விடயங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

15 ஆவது IORA அமைச்சர்களின் பேரவை மற்றும் ஒருங்கிணைந்த கூட்டங்கள் என்பன 2015 ஒக்டோபர் 20 -23 வரையில் இந்தோனேசியாவில் நடாத்தப்பட்டன. இந்து சமுத்திர வியாபார மன்றத்தின் (IORBF) 21 அவது கூட்டம் ஜகார்த்தாவில் நடாத்தப்பட்டது. இந்து சமுத்திர கரையோர கல்விசார் குழுவின் (IORAG) 21 ஆவது கூட்டம், வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழுவின் (WGTI)15 ஆவது கூட்டம், சிரேஷ்ட அதிகாரிகளின் (CSO) 17 ஆவது கூட்டம் மற்றும் பேரவை அமைச்சர்களின் (COM) 15 ஆவது கூட்டம் என்பன பதாங்கில் நடாத்தப்பட்டன. வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழுவின் (WGTI) கூட்டத்தின போது, இந்தியா "இந்து சமுத்திரத்தில் வளம்மிக்க பொருளாதாரம்" என்பது தொடர்பான ஆய்வு அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளது.

அமைச்சர்கள் கடல்சார் பிரச்சனைகள் தொடர்பில் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பினை அதிகரிப்பதனூடாக சர்வதெச சட்டவிதிகளுக்கமைவாக கடல்சார் சவால்களுக்கு பிராந்திய ரீதியான வலுவினையும் ஆதரவினையும் வழங்குதல், மீன்படி முகாமைத்துவத்திற்குப் பொறுப்பு வகித்தல் மற்றும் நிலையான ஊக்குவிப்பு என்பவற்றினூடாக, கடல்சார் உள்ளக கட்டமைப்புக்களில் முதலீடு, கப்பல்துறை மற்றும் கடல்வழிப் பயண ஒத்துழைப்பு மற்றும் அதனுன் தொடர்புடைய கைத்தொழில்களின் விரிவாக்கம் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவற்றில் நிலையான அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கான நடைமுறைகளினைப் பின்பற்றியிருந்தார்கள்.

### 5.3.3 சேவை வர்த்தகம் மீதான சார்க் உடன்படிக்கை (SATIS)

அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள், பூட்டானில் 2010 ஏப்பிரலில் நடாத்தப்பட்ட 16 ஆவது சார்க் மாநாட்டில் சேவை வர்த்தகம் மீதான சார்க் சட்டரீதியான உடன்படிக்கையில் (SATIS) கைச்சாத்திட்டார்கள். அனைத்து நாடுகளும் இந்த உடன்படிக்கையினை திருத்தியமைத்துள்ளதுடன் SATIS இன் கீழ் தேசிய இணக்கப்பாட்டு அட்டவணைகளினைப் பூர்த்தி செய்யும் செயல்முறைகளும் இடம்பெற்றுள்ளன.

SATIS தொடர்பான ஏற்றுமதி குழுவின் 11 ஆவது கூட்டம் குறித்த ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட்டதுடன் இக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் தமது இறுதிக் கோரிக்கைப் பட்டஎல்களினை தயார் செய்திருக்காமை அவதானிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் மட்டும் தமது இறுதிக் கோரிக்கைப் பட்டியல்களினை தயாரித்துள்ளன. பாகிஸ்தானும் இலங்கையும் உள்ளக அங்கீகாரங்களினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தமது இறுதிக் கோரிக்கைப் பட்டியல்களினைச் சமர்ப்பிக்க முடியுமென அறிவித்துள்ளதுடன் மாலைதீவு தமது அக்கறைதாரர்ளுடன் உசாவுதல்களினை மெற்கொண்டு வருவதாக அறிவித்துள்ளது. இலங்கையின் இணக்கப்பாட்டு அட்டவணையானது, அக்கறைதாரர்களுடன் மேலதிக உசாவுதல்களினை மேற்கொண்டதன் பின்னர் அமைச்சரவையின் இரண்டாவது சமர்ப்பித்தலுக்காக தயார் நிலையிலுள்ளது.

# 6. வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு

## 6.1 வெ ளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவம்

வர்த்தக திணைக்களத்தின் வர்த்தகசார் பிரதிநிதித்துவமானது வெளிநாடுகளிலுள்ள 25 தூதரங்களிலுள்ள 27 உத்தியோகத்தர்களினைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளில் விசேட கவனம் செலுத்துவதுடன் அனுசரணை நாடுகளில் இலங்கையின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களினை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். வர்த்தக உத்தியோகத்தர்கள் "அரச – தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்" எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பரந்தளவிலான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். வர்த்தக திணைக்களமானது வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய வியாபார ஆதரவு நிறவனங்களின் உதவுகையுடன் இலங்கை ஏற்றுமதிகளுக்கான சர்வதேச சந்தை வாய்ப்புக்களை மேலும் விரிவாக்குவதற்கும் பல்வகைப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளினை ஒழுங்கமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றது. வர்த்தக உத்தியோகத்தர்கள் முன்னணி ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான சர்வதேச சந்தை பங்கினை விரிவாக்குவதனூடாக புதிய ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களினை அறிமுகப்படுத்துவதனை பிரதானமாக நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற அதேவேளையில் தற்போதிருக்கும் சந்தைகளில் மிகவும் சுமுகமான சூழ்நிலையினை உருவாக்குவதிலும் அயராது உழைத்து வருகின்றனர். அத்துடன் வர்த்தக உத்தியோகத்தர்கள் சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களுக்கான சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்படும் பிரதான தொழிற்பாடுகள் பின்வருவனவற்றினையும் உள்ளடக்குகின்றன.

- பல்தரப்பு பேச்சுவார்த்தைகளில் (WTO, UNCTAD, CFC etc) இலங்கையின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்துதல் மற்றும் இருதரப்பு, பிராந்திய கொள்கை செயல்முறைகளில் ஈடுபடுதல்
- வர்த்தக மற்றும் ஊக்குவிப்புப் பேச்சுவார்த்தைகளில் இலங்கையினைப் பிரநிதித்துவப்படுத்துதல் மற்றும் அமுலாக்கல் மற்றும் ஒருங்கிணைத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- மூல விதிகள் மற்றும் உற்பத்தி மூல விடயங்களில் அக்கறையுடன் ஈடுபடுதல், பரந்தளவிலான வர்த்தக மற்றும் பொருளாதார நலன்கள் தொடர்பில் பிரதிநிதித்துவப் படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் அத்தகைய நாடுகளுக்கு பாதுகாப்பளித்தல்.
- EDB, BOI, NGJA, SLTPB, SLECC, SLECIC, இலங்கைத் தேயிலை சபை போன்ற உள்நாட்டு அதிகாரமளிப்புக்களுக்கான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளின் முன்னணி ஏற்பாட்டாளர்கள்
- அனுசரணை வழங்கும் நாடுகளில் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா போன்ற துறைகளுடன் தொடர்புடைய அரசாங்க அதிகாரிகளுடன் வலையமைப்பினைப் பேணுதலும் இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களுடன்

தொடர்புடைய பிரச்சனைகள் / விடயங்கள் தொடர்பில் வேறுபட்ட அரசாங்க மற்றும் சர்வதேச நிறுவனங்களில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

- அனுசரணை வழங்கும் நாட்டின் வர்த்தக மாற்றங்களினை, குறிப்பாக தரிவு மற்றும் தரிவல்லா நடவடிக்கைகளினை கண்காணித்தலும் அறிக்கையிடலும்.
- அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கை தொடர்பில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்.
- முக்கியமான சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் / நிகழ்வுகளில் இலங்கையின் பங்குபற்றுதலினை ஏற்பாடு செய்தல். இந்தப் பணியானது இலங்கை ஏற்றுமதிகளினை மேம்படுத்துவற்காக மேற்கொள்ளப்படும் வினைத்திறன் வாய்ந்த செயற்பாடுகளில் முதன்மையானதாகும்.
- இலங்கையில் நடாத்தப்பட்ட கண்காட்சிகள்/நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வெளிநாட்டு வியாபார தூதுக்குழுக்களுக்கு வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத் தூதுக்குழுக்களை இலங்கைக்கும் இலங்கைக்கு வெளியேயும் விஜயம் செய்வதற்கான வாய்ப்புக்களினை ஏற்படுத்திக் கொடுத்தலும் வியாபார வாய்ப்புக்களை கண்டறிந்து கொடுத்தலும்.
- வியாபார சந்தை வாய்ப்புக்களைக் கண்டறிவதற்காக இலங்கைக்கும் இலங்கைக்கு வெளியேயும் தனிநபர் வியாபார விஜயங்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல்.
- புதிய சந்தைகளினைக் கண்டறிதல், சந்தை ஆராய்ச்சிகளினை நடாத்துதல், மதிப்பாய்வுகள் மற்றும் சந்தை நுண்ணாய்வு மற்றும் உற்பத்திப் பொருள் தொடர்பான தகவலினை பரவச் செய்தல்
- வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான விசாரணைகளுக்கு விளக்கமளித்தல், வெளிநாட்டு வியாபாரங்களுடன் சந்திப்புக்கள் / விஜயங்களை மேற்கொள்ளுதல், இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவுகையினை அளித்தல், மற்றும் வர்த்தகப் பிணக்குகள் போன்றவற்றிற்குத் தீர்வு காணுதல்.
- தொழில்நுட்ப பரிமாற்றம், சந்தை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவுகை என்பவற்றிற்கான வெளிநாட்டு உதவுகையினை ஏற்படுத்திக் கொடுத்தல்
- அனுசரணை வழங்கும் நாட்டிற்குள் புதிய பொருட்கள் பிரவேசிப்பதற்கு தொற்றுநோய் சான்றிதழ் பெற்றுக் கொடுத்தல்
- அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கை அரசாங்க கேள்விப் பத்திரங்களை உரிய முறையில் பிரசித்தப்படுத்தல்

2011 - 2015 ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய தொழிற்பாடுகளின் பொழிப்பானது பின்வருமாறு கீழே தரப்படுகின்றது.

| நடவடிக்கைகள் | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | மொத்தம் (2011-2015) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுர்கள்/தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுர்கள்/தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | கண்காட்சிகள்/தூதுக் குழுக்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்கள்/தூதக்குழுக்களின் எண்ணிக்கை |
| அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கையிலிருந்தான ஊக்குவிப்பு சந்தை பங்குபற்றல் | 59 | 671 | 80 | 728 | 75 | 848 | 61 | 737 | 131 | 1,071 | 406 | 4,055 |
| அனுசரணை வழங்கும் நாட்டிலிருந்து இலங்கையில் ஊக்குவிப்பு சந்தை பங்குபற்றல் | 26 | 90 | 29 | 122 | 37 | 325 | 22 | 169 | 116 | 131 | 230 | 837 |
| இலங்கை எக்ஸ்போ 2012 இற்கான பங்குபற்றாளர்கள் | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | 01 | 1,160 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | 1 | 1,160 |
| அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கை குறித்த ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் (தனியொரு நாடு) | 116 | | 138 | | 127 | | 33 | | 63 | | 477 | |
| இலங்கைகான தூதுக்குழுக்கள் (எக்ஸ்போ – 2012 தவிர்ந்த) | 43 | 282 | 48 | 457 | 98 | 563 | 35 | 387 | 57 | 518 | 281 | 2,207 |
| அனுசரணை வழங்கும் நாட்டுக்கான தூதுக்குழுக்கள் | 61 | 436 | 54 | 455 | 70 | 600 | 78 | 805 | 74 | 814 | 337 | 3,110 |
| அனுசரணை வழங்கும் நாட்டுக்கான தனிநபர்களின் விஜயங்கள் | 174 | | 181 | | 201 | | 280 | | 141 | | 977 | |
| அனுசரணை வழங்கும் நாட்டுக்கான தனிநபர் விஜயம் | 139 | | 194 | | 270 | | 237 | | 153 | | 993 | |
| பதிலளிக்கப்பட்டஇருவழி வர்த்தக விசாரணைகள் | 1,751 | | 1,882 | | 2,133 | | 2,132 | | 2,713 | | 10,611 | |

### 6.1.1 செயல்நிறைவேற்ற மதிப்பீட்டுப் பகுப்பாய்வு

1. *ஏற்றுமதி ஊக்குவிப்பு*

தூதுக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டு தரப்பொன்றிடமிருந்தான உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளினை பாதுகாக்கும் நியதியானது தூதுக்குழுக்களினால் வாங்குனர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கிடையே வலையமைப்பான்றினை ஏற்படுத்துவதற்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்பட்ட காரணிகளின் அனுசரணைகளுக்கும் ஆதாரமாக அமைகின்றது. அத்தகைய காரணிகள் எமது கட்டளைகளுக்கப்பாலுள்ளன.

| நுண்பாக காரணிகள் | பெரும்பாக காரணிகள் |
|---|---|
| கம்பனியின் பொதுவான ஏற்றுமதி தயார்நிலை / ஆர்வம் | குறைந்த உற்பத்தி செலவுடன் கூடிய போட்டிப் பொருளாதாரம் |
| போட்டி விலை (ஏனைய வழங்குனர்களுடனான போட்டி) | தொழில்நுட்பத்திலுள்ள முதலீட்டு மட்டம் மற்றும் புத்தாக்க மட்டம் |
| உற்பத்திப் பொருளின் தரம் | நாட்டு மூலவள உரித்துடமை |
| வழங்கல் ஆற்றல் - உரிய நேரத்தில், ஒழுங்கான முறையில் பாரிய கட்டளைகளினைப் பூர்த்தி செய்வதற்கான இயலுமை. | வர்த்தக வசதிப்படுத்தல் மட்டம் |
| இறக்குமதி நாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகளுடன் இணங்குதல் | வரவு செலவுத்திட்ட கிடைப்பனவு |
| ஊக்குவிப்பு நியதியிடலின் கிடைப்பனவு | |

நாடானது மேலே குறிப்பிடப்பட்டவாறான முக்கியமான நுண்பாக மற்றும் பெரும்பாக காரணிகளினை கொண்டிருக்குமாயின், வசதிப்படுத்தலானது மிகவும் வினைத்திறன் வாய்ந்ததாக அமையலாம்.

2. *முதலீடு மற்றும் சுற்றுலா உக்குவிப்பு*

இலகுவான வழியாக, வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதுக்குழுவானது கைத்தேறுவதற்கான ஆரம்பிக்குகையிலிருந்தான முதலீட்டு விசாரணையினை கையாளுவதில்லை.
எனவே, தூதுக்குழுவின் செயல்நிறைவெற்றமானது, உரிய தூதுக்குழுவினால் எடுக்கப்பட்ட ஆரம்பிக்குகைளின் எண்ணிக்கை, முனைப்பு மற்றும் தகுந்த இலக்கு என்பவற்றின் நியதிகளின்படி அளவிடப்படுதல் வேண்டும்.

வர்த்தக அலுவலர்களினால் நிறைவேற்றப்பட்ட பிரதான பிரதிநிதித்துவங்களில் தெரிவு செய்யப்பட்ட சில பின்வருமாறு நிரல்படுத்தப்படுகின்றன.

- உலக வர்த்தக நிறுவனத்தின் TRIPS உடன்படிக்கையின் கீழ் புவிசார் அடையாளமாக இலங்கைத் தேயிலையினைப் பாதுகாப்பது தொடர்பில் தேசிய ஒழுங்குவிதியினை வரைவதற்கு உறுதுணையாகவிருந்தமை மற்றும் HS வகையீட்டில் 2007 இலிலிருந்து பயனுறுதியாகும் வகையில் இலங்கை கறுவாவுக்கான விசேட வகையீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டமை.
- உணவுச் சேர்க்கையாக கறுவாவில் சல்பர் டீ ஒக்சட்டின் (SO2) இன் பயன்பாடு தொடர்பில் சர்வதேச நியமமொன்றினை விருத்தி செய்வதற்கு ரோமில் கொடெக்ஸ் அலிமென்ரேறியஸ் ஆணைக்குழுவுக்கு முன்மொழிவு ஒன்றினைச் சமர்ப்பிப்பதனூடாக கறுவாவுடன் சல்பர் டீ ஒக்சைட்டுடன் சேர்ந்துள்ளதால் மாசுபட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் ஐரோப்பிய நாடுகளினால் விதிக்கப்பட்ட இலங்கைக் கறுவாவுக்கான தடையினை நிக்குவதற்கான உரிய நடவடிக்கை எடுத்தமை.
- விவசாயப் பேச்சுவார்த்தைகளில் சிறியதும் நலிவடைந்ததுமான நாடு மற்றும் விவசாயமல்லா பேச்சுவார்த்தைகளில் விகிதாசாரமற்ற வகையில் பாதிப்புக்குள்ளான நாடு என்றவகையில் குறிப்பாக உலக வர்த்தக நிறுவனத்தின் ஹோ சுற்றுப் பேச்சவார்த்தைகளின் போது நாடு எடுக்க வேண்டிய நடைமுறைகளினை வகுத்தமை.
- 1998, 2003 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கையின் உலக வர்த்தக நிறுவன வர்த்தக கொள்கை மீளாய்வு தொடர்பான அரசாங்க அறிக்கைகளினை தயாரித்தமை மற்றும் 2016 ஆம் ஆண்டுக்கான அறிக்கையினைத் தயாரித்தமை.
- பால் மா தொடர்பில் ஆர்வமுடைய உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடுகளுடன் உறுப்புரை XXVIII பேச்சுவார்த்தைகளினை நிறைவு செய்ததன் பின்னர் உலக வர்த்தக நிறுவனத்திலுள்ள இலங்கையின் தரிவு கட்டுப்பாடுகள் கொண்டிருக்கின்ற இலங்கையின் தரிவு அட்டவணையினை இறுதியாக்குதல்
- 2004 இல் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விசேட ஊக்குவிப்பு ஏற்பாடுகளினைப் பெற்றுக் கொள்வதற்கான செயல்முறைகளுக்கு வழி சமைத்தமை மற்றும் 2005, 2008 இல் EU GSP+ வர்த்தக சலுகைகைள் மற்றும் EU GSP+ இனை மீளப் பெறுவதற்கான தற்போதைய பேச்சுவார்த்தைகள் என்பவற்றிற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டமை.
- ஐ.ஒ – சட்டவிரோத, ஒழுங்கமைக்கப்படாத மற்றும் குறித்துரைக்கப்படாத மீன்பிடி ஒழுங்குவிதி (IUU) என்பவற்றின் கீழ் இலங்கையிலிருந்தான மீன்பிடி உற்பத்திகளின் மீது ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட தடையினை நிக்குவதற்கான நடைமுறைகளினை வகுத்தமை
- ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கையின் பழங்கள், மரக்கறிகள் மற்றும் ஏனைய உயிர் தாவரங்களின் ஏற்றுமதிகள் தொடர்பில் ஆரோக்கியம் தொடர்பாக எழுகின்ற பிரச்சனைகள் குறித்து பகுப்பாய்வு செய்தமை மற்றும் குறுகிய காலத்தினுள் அது தொடர்பான பிரச்சனைகளைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுத்தமை.
- முன்னைய GSP நிகழ்ச்சித்திட்டத்தினை புதுப்பிப்பதற்கு அவற்றினை ஐக்கிய அமெரிக்க காங்கிரசின் உறுப்பினர்களுக்கப்பால் பிரதான EU GSP பயனாளி நாடுகளின் குழுவொன்றுடன் ஆர்வத்துடன் பங்குபற்றியமை.
- உலக வர்த்தக கண்காட்சி மற்றும் ஏனைய சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் இலங்கை பங்குபற்றுவதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டமை.
- US Off Road Tyres (OTR) எதிரீட்டு விசாரணைகளினை நடாத்துதல்.

## 6.2 வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஊக்குவிப்பு (FDI)

வெளிநாட்டிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினக்கொண்டு வருவதில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் வெளிநாடுகளிலுள்ள பிரதான முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவராணமைகளுடன் உறுதியான வலைமைப்புக்ளையும் தொடர்புளையும் ஏற்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், அவர்கள் இலங்கையில் தயாரிப்புக் கைத்தொழற்சாலைகளின் விரிவாக்கத்திற்கான உள்ளார்ந்த கூட்டு தொழில்முயற்சிப் பங்காளர்களினை இனங்காண்பதற்காக இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் வியாபார தூதுக்குழுக்கள் ஒவ்வொன்றும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

அதற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் உள்ளார்ந்த முதலீட்டாளர்களை உரிய சந்தைகளில் சந்தித்து இலங்கையில் கிடைக்கக்கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்துள்ளனர்.

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக உத்தியோகத்தர்கள் மின்வலுத் துறை, புதுப்பிக்கப்படக்கூடிய வலு, கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரம் மற்றும் உயிர் வாயு, ஆதன வியாபார விருத்தி, உலோக செயல்முறை, ரயர் தயாரிப்பு, தளபாட உற்பத்தி, புடவை தயாரிப்பு, சுற்றுலா உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி, புகையிரத துறையின்உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி, மீன் பதனிடல், உணவு கானிடல், விவசாய மற்றும் இயற்கைப் பண்ணை நடவடிக்கைகள், தோல் உற்பத்திகள், சுகாதார நலன் பேணல் துறை, BPO, வீட்டு கவனிப்பு சேவைகள், மருந்தாக்கல் துறை, தகவல் தொழில்நுட்ப துறை, கழிவு நீர் கட்டுப்பாட்டு நடவடிக்கை, நீர் கட்டுப்பாட்டு மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள், மணல் சட்ட விருத்தி, நிருமண கைத்தொழில், சுற்றுலாத் துறை, வாகன ஒருங்கிணைப்பு போன்ற துறைகளில் வெளிநாட்டு முடுதலீடுகளிலிருந்து 81 முதலீட்டு முகனமொழவகளினைப் பெற்றுள்ளனர்.

## 6.3 சுற்றுலா ஊக்குவிப்பு

சுற்றுலாத்துறையில் மறைந்துள்ளவற்றினை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கும் நோக்குடன் வர்த்தக உத்தியோகத்தர்களினால் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை விமான சேவையானது கண்கவர் சுற்றுலா இடமாக இலங்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைளையும் மேற்கொண்டுள்ளது. சுற்றுலா இடமாக இலங்கையை ஊக்குவிப்பதற்கு வர்த்தக உத்தயோகத்தர்களினால் பின்பற்றப்படும் பிரதான தந்திரோபாயங்கள், விசேட கருத்தரங்குகள், மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல், சுற்றுலா குழுக்கள் விஜயம் செய்தல், சர்வதேச சுற்றுலா சந்தைகளில் பங்குபற்றுதல், இலங்கைக்கான ஊடக தூதுக்குழுக்கள் மற்றும் FAM பயண ஒழுங்குகளை ஏற்பாடு செய்தல், சுற்றுலா ஊக்குவிப்பு பேரவைகள், அநுசணை வழங்கும் நாட்டிலுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக பிரபல்யப்படுத்துதல் போன்றவை உள்ளடங்குகின்றன.

## 6.4 வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா விசாரணைகளை மேற்கொள்ளுதல்

வர்த்தக திணைக்களத்தின் வர்த்தக உத்தியோகத்தர்கள் உள்நாட்டிலும் அவ்வாறே வெளிநாட்டு வர்த்தகர்களினாலும் எழுப்பப்படுகின்ற வர்த்தக வினாக்கள் தொடர்பில்

காத்திரமான பணியினை ஆற்றி வருகின்றனர். வெளிநாடுகளில் சேவையாற்றுகின்ற வர்த்தக உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுத் தரப்புக்களினால் எழுப்பப்படுகின்ற முதலீடு மற்றும் சுற்றுலா தொடர்பான விசாரணைகளிலும் கலந்து கொள்கின்றார்கள். மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் அத்தகைய 2,700 விசாரணைகளினைப் பெற்றுள்ளதுடன் முதலீடு மற்றும் சுற்றுலா கேந்திர நிலையமக இலங்கை விளங்குவதால், வெளிநாட்டு சந்தைகளில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களினை ஊக்குவிக்கும் நோக்குடன் தேவையான வழிகாட்டுதல்களினை வழங்குவதன் மூலம் அவற்றில் முறையாக கலந்து கொண்டுள்ளார்கள்

வெளிநாடுகளிலுள்ள வாங்குனர்களிடமிருந்து வர்த்தக உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட வர்த்தக விசாரணைகள் உடனடி நடவடிக்கையினை எடுப்பதற்காக, இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு நேரடியாகவும், அவ்வாறே, வர்த்தக மன்றம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை போன்வற்றினூடாகவும் அனுப்பி வைக்கப்படுகின்றன. வர்த்தக திணைக்களத்தினல் பெறப்படும் விசாரணைகளும் வெளிநாட்டு தூதரகங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் உதவியுடன் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. வர்த்தக உத்தியோகத்தர்கள், இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாட்டு வாங்குனர்களினைக் கண்டறிவதில் வர்த்தக மன்றம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை போன்றவற்றிற்கு அவர்கள் தமது உதவுகையினை வழங்கி வருகின்றனர்.

அவ்வாறே, முதலீடு மற்றும் சுற்றுலா என்பவற்றுடன் தொடர்புடைய வர்த்தக உத்தியோகத்தர்களினால் பெறப்படும் விசாரணைகள் இலங்கையிலுள்ள உரிய நிறுவனங்கள் /அமைச்சுக்களுக்கு அவற்றினை நெறிப்படுத்தும் அதேவேளையில் அவர்களினால் தேவையான உதவிகளும் வழங்கப்பட்டு வந்துள்ளன.

## 6.5 வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கான உதவுகை

வர்த்தகம் சார்ந்த பிணக்குகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்குமிடையில் சுமுகமான தீர்வொன்றினைக் காணும் நோக்குடன் வர்த்தக திணைக்களத்தினால் சமரசம் செய்து வைக்கப்படுகின்றன. எடுக்கப்பட்ட நடவடிக்கையானது பாரபட்சமின்றியும் சுமுகமான தீர்வினைக் காணப்பதனை நோக்கமாகக் கொண்டும் பரஸ்பரம் பேச்சவார்த்தைகளினூடாக தீர்வுகள் காணப்பட்டன.

மீளாய்வு காலப்பகுதியில், வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் அத்தகைய 78 முறைப்பாடுகள் கையாளப்பட்டுள்ளன. திணைக்களமும் அவ்வாறான 77 முறைப்பாடுகளினைப் பெற்றுள்ளதுடன் இரண்டு தரப்புக்களுக்குமிடையில் சுமுகமான தீர்வொன்றினைக் காணும் பொருட்டு அவை முறையாக கையாளப்பட்டுள்ளன. இவற்றுள் 50% மான பிணக்குகள் சுமுகமான தீர்வினை எட்டியுள்ளன.

## 6.6 வர்த்தக சந்தைப்படுத்தல் பங்குபற்றுதல்

கைத்தொழில்சார் தொழில்நுட்ப மட்டத்தினை அதிகரிக்கும் நோக்குடன் தகவல் மற்றும் வர்த்தக சந்தைகளுக்கான விதித்துரைக்கப்பட்ட தேவைகள் வர்த்தக பங்காளர்களுக்கான முக்கிய தகவல் மூலங்கள் மற்றும் சந்திப்பு இடங்களுக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலுக்கான வினைத்திறன் வாய்ந்த சந்தைகளுக்கு அண்மித்ததாக விருத்தி

செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஊடுருவக் கூடிய வகையிலான வினைத்தழறன் வாய்ந்த ஊக்குவிப்பு முறையாக வியாபார சந்தை பங்குபற்றலின் முக்கியத்துவத்தினை அங்கீகரிகும் அதேவேளையில், வர்த்தக உத்தியோகத்தர்கள் மீளாய்வின் கீழான காலப்பகுதியில் அனுசரணை / ஏற்றுக் கொள்ளப்பட்ட நாடுகளில் நடாத்தப்பட்ட 131 வர்த்தக சந்தைகள் தொடர்பில் உரிய நேரத்தில் விளம்பரம் செய்துள்ளதுடன் 1000 இற்கும் மேற்பட்ட இலங்கை கண்காட்சியாளர்கள் / வருகையாளர்களின் பங்களிப்பினை உறுதி செய்துள்ளனர். இத்தகைய சந்தைகளில் இலங்கையின் பங்குபற்றுதலினை ஏற்பாடு செய்யும் நோக்கில் வர்த்தக உத்தியோகத்தர்கள் இலங்கை கண்காட்சியாளர்களுகான காடசி மையங்களினை பேச்சுவார்த்தை நடாத்தி எவ்வித கட்டணமுமின்றி வழங்கியுள்ளனர். அதன் விளைவாக, இலங்கையானது, ஆகக்குறைந்த செலவில் அதன் உற்பத்திப் பொருட்களினை கண்கவரும் வகையில் காட்சிப்படுத்தியுள்ளது.

மேலும், வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் இலங்கையில் நடாத்தப்பட்ட வர்த்தக மற்றும் வியாபார கண்காட்சிகளுக்கு பரந்தளவிலான பிரபல்யத்தினை அளித்துள்ளார்கள். இத்தகைய பிரபல்யப்படுத்தலுக்காக மேற்கொள்ளப்படும் விளம்பர நடவடிக்கைகள் வெற்றியளிக்க வேண்டுமென்பதற்காக இத்தகைய கண்காட்சியகளில் வெளிநாடுகளிலுள்ள வாங்குனர்களினால் கணிசமானளவு பங்களிப்பு வழங்கப்படுமென்பதனை அவர்கள் உறுதிப்படுத்தியிருந்தார்கள்.

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட வியாபார சந்தைகளுக்கு முறையான விளம்பரம் மேற்கொள்ளப்பட்டதுடன் மட்டுமல்லாது, அனுசரணை/ஏற்றுக்காள்ளப்பட்ட நாடுகளில் உரிய முறையில் நடாத்தப்பட்ட வர்த்தக சந்தைகளிலும் வரத்தக உத்தியோகத்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள். குறித்த காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் அத்தகைய 137 சந்தைகள் / கண்காட்சிகளுக்கு விஜயம் செய்துள்ளதுடன் குறித்த விஜயங்களின் போது 600 இற்கும் மேற்பட்ட வியாபார தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார்கள்.

## 6.7 உலக எக்ஸ்போ மிலான் 2015 இல் இலங்கையின் பங்குபற்றல்

“World EXPO” என அழைக்கப்படும் உலக பொருட்காட்சி இத்தாலி மிலானில் 2015 ஒக்டாபர் 1 இலிருந்து 31 வரையில் 6 மாதங்களினைக் கொண்ட நிகழ்வாக நடாத்தப்பட்டது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சானது இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை தேயிலைச் சபை, தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை, இலங்கை முதலீட்டுச் சபை, சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் தேசிய கைப்பணிச் சபை மற்றும் இத்தாலி, ரோமிலுள்ள இலங்கை தூதரகம் என்பவற்றுடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவைகை குழுவொனறினைத் தெரிவு செய்திருந்தது.

இலங்கைக்கு 250 சதுர அடி நிலத்தளமானது இலங்கை பிரதம மந்திரியின் அலுவலகம் மற்றும் இத்தாலியிலுள்ள இலங்கை தூதுவர் ஆகியோரின் தலையீட்டினால் “Fruits & Legumes” எனும் பெயரில் இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வினை ஏற்பாடு செய்வதற்கு ரூபா.49.94 மில்லியன் உண்மைச் செலவினமாக ஏற்பட்டுள்ளதுடன் அதன் மதிப்பீட்டுச் செலவு ரூபா. 71.25 மில்லியனாகும்.

கண்காட்சியின் பெறுபேறுகள் பின்வருமாறு;

1. இந்நிகழ்வில், சுமார் 29 இலங்கை கம்பனிகள் சுழற்சி முறையில் பங்குபற்றி தங்களின் உற்பத்திப் பொருட்களினைக் காட்சிப்படுத்தியிருந்தார்கள்.
2. இலங்கை கூடாரத்திற்கு சுமார் 700,000 வருகையாளர்கள் வந்திருந்தார்கள்
3. இத்தாலி – அல்பி ருவர்ஸில் சந்தை தலைமைத்துவ பிரயாண ஏற்பாட்டாளருடன் இலங்கை சுற்றுலாவுக்காக 1.3 மில்லியன் டொலர்கள் பெறுமதியுடைய வாடகை ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டது.
4. 2015 மே 22 ஆம் திகதியன்று திரு.பந்துல எகோடகேயின் தலைமையில் (தலைவர் – பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் – ஏற்றுமதி அபிவிருத்திச் சபை) “இலங்கை முறைசார் கேந்திர நிலையம்” எனும் தலைப்பில் பத்திரிகையாளர் மாநாடொன்று நடாத்தப்பட்டது.
5. முதலீட்டுச் சபையின் அழைப்பின் பேரில், Calzedonia S P A முகாமைப் பணிப்பாளர் திரு.மக்றோ கார்லெற்றோ (இலங்கையிலுள்ள மெகா லைனின் உரிமையாளர்) இலங்கையில் தமது வியாபாரத்தின் வெற்றி குறுத்த அனுபவங்கள் குறித்து விளக்கமளித்தார்
6. மாத்தளையிலிருந்தான இலங்கை இரத்தினக்கல் ஏற்றுமதியாளர் ஒருவர், நீலக்கல் ஒன்றிற்காக ரூபா.53 மில்லியன் பெறுமதியான கொள்வனவுக் கட்டளையொன்றினை மிலான் எக்ஸ்போவில் பெற்றுள்ளார்.
7. இலங்கைத் தேயிலைக்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் “இலங்கைத் தேயிலை – உலகின் மிகவும் சிற்நத முறையிலான தேயிலை” எனும் தொனிப் பொருளில் ஊக்குவிப்பு நடவடிக்கைளில்” ஈடுபடுதல்.
8. மிலானிலுள்ள பிரயாண முகவராண்மைகளின் கோட்பாட்டு ரீதியான பகுப்பின் அடிப்படையில சிறிலங்கன் எயார்லைன்ஸினால் விற்பனை வலுவூட்டல், புதிய உற்பத்திப் பொருள் மற்றும் வரி வீத வெளிப்படுத்தல் கூட்டம் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன.
9. பரிசுக் குலுலக்கல்கள், தேனீர் சுவைக்கும் அமர்வுகள், கலாசாசார நிகழ்வுகள் போன்ற பல்வேறு நாளாந்த நிகழ்ச்சிகளுடன் இலங்கைத் தேயிலையினை நினைவு கூரும் வாரமொன்று கொண்டாடப்பட்டது.
10. ஒவ்வொரு நாடும் மற்றைய நாட்டுடன் வர்த்தக உறவுகளைப் பேணும் வகையில், எக்ஸ்போவில் இலங்கை கூடாரத்திலுள்ள இலங்கையின் மாநாட்டு அறையில் சுவிஸ் – ஆசிய வர்த்தக மன்னறத்தின் வருடாந்த சபைக் கூட்டம் இடம்பெற்றது.
11. இலங்கைத் தேயிலை, வாசனைத் திரவியங்கள், இரத்தினக்கற்கள், பிரயாணம் மற்றும் சுற்றுலா, கைப்பணிப் பொருட்கள் என்பன உள்ளடங்கலான இலங்கையின் உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் 120 இறகும் அதிகமான பொருட்கள் தொடர்பான விசாரணைகள் பெறப்பட்டன.
12. பங்குபற்றுகின்ற ஒவ்வொரு நாட்டினதும் தேசிய தினம் நிகழ்வு நடாத்தப்படுவது ஒரு முறையாக இருந்துள்ளதால் இலங்கையின் தேசிய தின நிகழ்வானது இத்தாலியிலுள்ள இலங்கை தூதரகத்தின் ஆதரவுடன் 2015 ஒக்டோபர் 22 ஆம் திகதியன்று ஏற்பாடு செய்யப்ப்ட்டது.
13. மிலானோ இத்தாலிய வர்த்தக மன்றம் மற்றும் இத்தாலியிலுள்ள இலங்கை தூதரகம் என்பவற்றின் ஆதரவுடன் இலங்கை தேசிய தினத்தினை முன்னிட்டு வியாபார மன்றம் மற்றும் பத்திரிகையாளர் மாநாடு என்பன நடாத்தப்பட்டன. கௌரவ.சுற்றுலத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற வர்த்தக மன்றத்திலும் பத்திரிகையாளர் மாநாட்டிலும் 200 இற்கும் அதிகமான இத்தாலிய வர்த்தகர்கள் கலந்து கொண்டார்கள்.

## 6.8 வதிவிட விசாவுக்கான பரிந்துரை

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர், அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் இலங்கைக்கு வருகை தந்து வெளிநாட்டு கம்பனிகளின் இணைப்பு அலுவலகங்கள் / கிளை அலுவலகங்கள் மற்றும் ஏனைய வர்த்தக மற்றும் வியாபார முயற்சிகளில் ஈடுபடுகின்ற புலம் பெயர்ந்தவர்களுக்கான வதிவிட விசாக்களுக்கான பரிந்துரை கடிதங்களினை வழங்குகின்ற அதிகாரத்தினை வர்த்தக திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. அத்தகைய பரிந்துரைகளுக்கான விண்ணப்பங்கள் தேசிய பொருளாதாரத்திற்கு சாத்தியமான பயன்களை அளிப்பதன் மூலம், ஏற்றுமதி வர்த்தகம், தொழில்நுட்ப மாற்றும் மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கு அத்தகைய வேலைவாய்ப்பானது நேரடியாக என்பதனைக் கருத்தில் கொண்டு மிகவும் கவனமாக மதிப்பீடு செய்யப்படுகின்றன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது, 42 பிரித்தானிய, 40 இந்திய,14 யப்பானிய, 13 கொரிய, 13 பாகிஸ்தானிய, சீன, மலேசிய, மற்றும் தாய்லாந்து உள்ளடங்கலான பல்வேறு நாடுகளிலிருந்தான 86 விண்ணப்பதாரிகள் மற்றும் 69 தங்கியிருப்போர் உள்ளடங்கலான 155 குடிபெயர்ந்தவர்களுக்கான வதிவிட விசா பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

## 6.9 கடன் முகவராண்மைகளின் அங்கீகாரம்

1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் கீழ், ஏதேனும் கம்பனி, நிறுவனம் அல்லது தனிநபரினை அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவராண்மையாக பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரமானது வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகமானவர்1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் 114(1) ஆம் பிரிவின் கீழ் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இரண்டு ஏனைய உறுப்பினர்களைக் கொண்ட சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

மீளாய்வு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது 11 விண்ணப்பங்களினை செயல் முறைக்குட்படுத்தியுள்ளது (அவற்றுள் 08 புதியவை மற்றும் 03 கடந்த ஆண்டில் தவறவிடப்பட்டவை. சபையினால் பெறப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், இவ்வாறு செயல்முறைக்குட்படுத்தப்பட்ட 11 விண்ணப்பங்களில், 03 கம்பனிகள் கடன் முகவராண்மை நிறுவனங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

## 6.10 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

### 6.10.1 அரசாங்கத்தின் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வர்த்தக கொள்கை மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு தொடர்பான கருத்தரங்கு

இலங்கை அரசாங்கத்தின் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்திற்கிணங்க, வர்த்தக திணைக்களம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கேட்போர் கூடத்தில்2015 பெப்ரவரி 25 ஆம் திகதி நடாத்தப்பட்ட “அரசாங்கத்தின் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வர்த்தக கொள்கை மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு”

எனும் தலைப்பிலான கருத்தரங்கொன்றினை இணைந்து மேற்கொண்டது. இந்நிகழ்வில், கொள்கை திட்டமிடல், பொருளாதார விவகாரங்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகார மற்றும் கலாச்சார அலுவல்கள் பிரதி அமைச்சர் கௌரவ.ஹர்ஷ டீ சில்வா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பிரதான உரையினை ஆற்றியுள்ளார். கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர், கௌரவ.ரிசாட் பதியுதீன் அவர்கள் இக்கருத்தரங்கிற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிகழ்வின் நோக்கமானது, வர்த்தக சமூகத்திற்கு குறிப்பாக அரசாங்கத்தின் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையின் வர்த்தக கொள்கை மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பின் நியதிகளின்படி, வர்த்தக திணைக்களம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் முன்னெடுப்படும் பிரதான பணிகள் தொடர்பில் ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு அறியத்தருவதேயாகும்.

உலகளாவிய வர்த்தக கொள்கை தொடர்பான புதிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை அறிந்து கொள்ளும் நோக்குடன் அனைத்து மட்டங்களிலுமுள்ள 250 இற்கும் மேற்பட்ட ஏற்றுமதியாளர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தார்கள். இக்கருத்தரங்கில் பங்குபற்றியவர்களுக்கு, இலங்கையின் சர்வதேச வர்த்தக கொள்கை, ஏற்றுமதிக் கொள்கை, ஊக்குவிப்பு நடவடிக்கைகள் என்பன தொடர்பில் பரந்தளவில் அறிவூட்டப்பட்டதுடன் அவை வர்த்தக திணைக்களம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நோக்கல்லையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. மேற்குறித்த 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்ப்புக்களினை அடைவதற்காக கைத்தொழில் மற்றும வர்த்தக அமைச்சினால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் இக்கருத்தரங்கில் விபரிக்கப்பட்டன.

### 6.10.2 இலங்கையில் சுவிஸ் நாட்டு வர்த்தகர்களுடனான வட்ட மேசை கலந்துரையாடல்

இலங்கை அரசாங்கத்தினதும் சுவிஸ் நாட்டினைச் சேர்ந்த வர்த்தக பிரதிநிதிகளுக்கும் இடையிலான வட்ட மேசை கலந்துரையாடல் ஒன்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கேட்போர் கூடத்தில் 2015 மே 13 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. இந்நிகழ்வினை வர்த்தக திணைக்களமானது இலங்கையிலுள்ள சுவிஸ் தூதரகம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கலந்துரையாடலின் பிரதான நோக்கம், இலங்கையில் சுவிஸ் முதலீடுகளினை விரிவாக்குதல் மற்றும் இலங்கையில் அவர்களின் வியாபார செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதுமேயாகும்.

இந்தக் கலந்துரையாடலுக்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதியுதீன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கொள்கை திட்டமிடல், பொருளாதார விவகாரங்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார அலுவல்கள் பிரதி அமைச்சர், கலாநிதி.ஹர்ஷ டீ சில்வா அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார்கள். இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிற்சலாந்து தூதுவர் அதி மேதகு ஹெயின்ஸ் வால்கர் நெதர்கோர்னும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். கொழும்பிலுள்ள 20 இற்கும் மேற்பட்ட சுவிஸ் நாட்டு வர்த்தகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு இலங்கையில் தமது வர்த்தக அனுபவங்கள் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். இலங்கையில் அவர்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் CSR நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்தும் இலங்கையில் வியாபார நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள்

மற்றும் முதலீகள் குறித்த அவர்களின் எதிர்கால திட்டங்கள் என்பன குறித்தும் அவர்கள் இதன்போது பகிர்ந்து கொண்டார்கள்.

வட்ட மேசை கலந்துரையாடலுக்கு மேலதிகமாக, சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகளினைக் கொண்ட சுவிஸ் நாட்டு தூதுக் குழுவொன்று 2015 மே மூன்றாம் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தார்கள். இந்த விஜயத்தின் நோக்கம் இலங்கையில் சுவிஸ் வாங்குனர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களைக் கண்டறிவதேயாகும். இத் தூதுக்குழுவுக்கு பொருளாதார விவகாரங்களுக்கான இராஜாங்க செயலகத்தின் இரதரப்பு வர்த்தக பொருளாதார உறவுகளுக்கான (SECO) தலைவர், அதிமேதகு தூதுவர் கலாநிதி. லிவியா லியூ தலைமை வகித்தார். சுவிஸ் ஆசிய வர்த்தக மன்ற தலைவர், அதிமேதகு சுவிஸ் நாட்டு தூதுவர் மற்றும் தூதரக அதிகாரிள ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கெண்டார்கள்.

வர்த்தக திணைக்களமானது, கௌரவ அமைச்சர்களுக்கும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை வர்த்தக மன்றம் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் இடையில் கூட்டங்களை எற்பாடு செய்வதன் மூலம் தூதுக்குழுவினை வசதிப்படுத்துகின்றது. இத்தகைய கூட்டங்களினூடாக, இலங்கைக்கு வழங்கப்படும் சுவிஸ்-ஜீஎஸ்பி பயன்பாடு, பொருளாதார மறுசீரமைப்பு, முதலீட்டாளர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள், இரட்டை வரி விதிப்பனவினைத் தவிர்க்கும் உடன்படிக்கைகள் மற்றும் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கையில் ‘One-Stop-Shop’ இனை தாபிப்பதன் முக்கியத்துவம் என்பன குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

### 6.10.3 “பாகிஸ்தானில் வியாபார வாய்ப்புக்கள்” தொடர்பான இலங்கை – பாகிஸ்தானிய வியாபார ஒருங்கிணைந்த அமர்வு

வர்த்தக திணைக்களமானது “பாகிங்தானில் வியாபார வாய்ப்புக்கள்” தொடர்பான இலங்கை – பாகிஸ்தானிய வியாபார ஒருங்கிணைந்த அமர்வொன்றினை, பாகிஸ்தானிலுள்ள வியாபார வாய்ப்புக்களினை வெளிக்கொணரும் நோக்குடன் பாகிஸ்தானிய வர்த்தக அமைச்சரின் விஜயத்தின்போது கௌரவ. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரின் முன்னிலையில் இலங்கை வர்த்தக சமூகத்தின் பங்குபற்றுதலுடன் நவம்பர் 11 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தது.

பாகிஸ்தானிய, மருந்தாக்கல், உணவுத்துறை மற்றும் சீமெந்து ஆகிய துறைகளினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனியார் துறையினைச் சேர்ந்த எட்டு பாகிஸ்தானிய தூதுக்குழுக்கள் அமைச்சருடன் இணைந்து வருகை தந்திருந்தனர். 150 இற்கும் அதிகமான இலங்கையின் தனியார் துறையினைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பங்குபற்றியுள்ளதுடன் வர்த்தகம், முதலீடு மற்றும் கைத்தொழில் ஊக்குவிப்பு முகவராண்மையினைச் சேர்ந்த அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார்கள்.

இரண்டு நாட்டினையும் சேர்ந்த தனியார் துறைப் பிரதிநிதிகள் குறித்த எல்லைகளில் அவர்கள் எதிர்கொள்ளும் தடைகளுக்கு விரைவில் தீர்வு காண்பது தொடர்பிலான தமது கோரிக்கைகளினை உரிய அமைச்சர்களுக்கு முன்வைத்தார்கள்.

## 6.11 திறன் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

### 6.11.1 வர்த்தக கொள்கை பகுப்பாய்வு மீதான திறன் கட்டியெழுப்புதல்

நவீன கருவிகள் மற்றும் வர்த்தக கொள்கை பகுப்பாய்வுகளின் பகுப்பாய்வு மாதிரிகள் தொடர்பான திறைனைக் கட்டியெழுப்பும் நோக்குடன், வர்த்தக திணைக்களமானது UNESCAP மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவருத்திச் சபை அகியவற்றுடன் ஒன்றிணைந்து கொழும்பில் 2015 ஜூலை 13 இலிருந்து 15 வரையில் “வர்த்தக கொள்கை பகுப்பாய்வுகள் மீதான திறன் கட்டியெழுப்புதல்” நிகழ்ச்சித்திட்டமொன்றினை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது நவீன பகுப்பாய்வு கருவிகள் மற்றும் வர்த்தக / பொருளாதார தரவுகளினைப் பகுப்பாய்வு செய்வதிலுள்ள மாதிரிகள் மற்றும் எதிர்கால தேவைகளினை நிறைவு செய்வதற்கு வசதிப்படுத்துகின்ற நவீன பகுப்பாய்வு தொழில்நுட்பங்களினைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்காக பங்குபற்றாளர்களினை பயிற்றுவித்தல் என்பனவற்றினை உள்ளடக்குகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் வர்த்தக திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் வர்த்தக மன்றங்களினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 35 பங்குபற்றாளர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

## 7. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்குதல்

வர்த்தக திணைக்களமானது பின்வரும் முன்னுரிமைத் திட்டங்கள் மற்றும் பிராந்திய, இருதரப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான உற்பத்தி நாட்டு சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.

- ✓ முன்னுரிமையின் பொதுவான முறைமை (GSP)
- ✓ வர்த்தக முன்னுரிமையின் பூகோள முறைமை (GSTP)
- ✓ சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)
- ✓ தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- ✓ இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)
- ✓ பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)
- ✓ ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

வேலை நாளொன்றில் சராசரியாக வர்த்தக திணைக்களத்தினால் 500 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் செயல்முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. உயர்தரத்தில் பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினைக் கொண்ட குழுவொன்று உற்பத்தி நாட்டுச்சான்றிதழ் வழங்கும் பிரிவில் முழுநேரமும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முன் அனுமதியின்றி அலுவலக நேரங்களில் உசாவுதல்களும் மேலதிக விளக்கங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. உயர் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர்களினால் தினசரி சராசரியாக 30 முதல் 50 வரையிலான உசாவுதவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையானது வேறுபட்ட உடன்படிக்கைகள்/ஏற்பாடுகளின் கீழான உரிய மூல விதிகளின் வகையீடுகளில் ஆழமான அறிவுடன் விசேடமாக வடிவமைக்கப்பட்டு உயர்தரத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் வர்த்தக திணைக்களம் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாகின்றது;

(அ) வரிச்சலுகைகளுக்கான பொருட்களின் தகமையினை மதிப்பீடு செய்தல்

(ஆ) ஏற்றுமதியாளர்களின் விபரங்களைப் பதிவு செய்தலும் பேணுதலும்,

(இ) தமது தகமையினை நிரூபிப்பதற்காக ஏற்றுமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் செலவுக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய இணை ஆவணங்களை மதிப்பீடு செய்தல்,

(ஈ) முன்னுரிமை வழங்கும் நாடுகளின் கோரிக்கையின் பேரில் உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையின் பின்னரான கணக்காய்வினை நடாத்துதல் மற்றும்

(உ) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் பகுப்பாய்வுஅறிக்கைகளினை தொகுத்தலும்.

கடந்த 5 ஆண்டுகளில் வர்த்தக திணைக்களத்தினால் வழங்க்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் விபரம் கீழே தரப்படுகின்றது.

| **உடன்படிக்கை** | **வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றதழ்களின் எண்ணிக்கை** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| EU GSP | 85,600 | 114,029 | 79,774 | 83,898 | 72,675 |
| GSP - CIS நாடுகள் | 856 | 1,009 | 929 | 842 | 480 |
| GSP – ஏனைய நாடுகள் | 14,782 | 13,909 | 13,410 | 12,706 | 11,985 |
| ISFTA | 35 | 9,742 | 11,088 | 10,852 | 11,494 |
| PSFTA | 30 | 8,057 | 8,190 | 7,069 | 7,320 |
| APTA | 2,424 | 2,781 | 3,482 | 4,131 | 4,025 |
| SAFTA | - | 26 | 74 | 388 | 231 |
| SAPTA | 248 | 253 | 243 | 309 | 304 |
| GSTP | 115 | 136 | 147 | 107 | 150 |
| **மொத்தம்** | **104,090** | **149,942** | **117,337** | **120,302** | **108,664** |

## 8. வர்த்தக திணைக்களத்தின் பதவியினர் இடநகர்வுகள் – 2015

| அலுவலரின் பெயர் | இடநகர்வு | திகதி |
|---|---|---|
| ***பதவி உயர்வுகள்*** | | |
| திருமதி.எஸ்.என்.ஐ.விஜேரத்ன | வர்த்தகப் பணிப்பாளர் நாயகமாக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். | 08.06.2015 |
| திரு.ஆர்.டிஎஸ்.குமார | ஜெனிவாவில், தூதுவர் மற்றும் நிரந்த பிரதிநிதி/உவநி ஆக கடமையினை ஏற்றார். | 01.06.2015 |
| திரு.பி.எம்.எஸ்.ஏ.பி. கொடவிற்ற | வர்த்தகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 10.06.2015 |
| திருமதி.கோதமி ஆர்.சில்வா | வர்த்தகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 10.06.2015 |
| செல்வி.உபேக்ஷா சமரதுங்க | வர்த்தகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 10.06.2015 |
| திரு.டி.ஜி.ஏ.பி. தர்மபிரிய | வர்த்தகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார் | 10.06.2015 |
| **சேவை நிலையங்களின் மாற்றம்– திணைக்களத்திற்கு திரும்பி வருதல்** | | |
| திருமதி.எஸ்.என்.ஐ.விஜேரத்ன வர்த்தகப் பணிப்பாளர் | ஐ.இ. இலண்டன் உயர் ஸ்தானிகராலயத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ளார். | 06.06.2015 |
| திரு.எம்.எம்.அப்துல் ரஹீம் பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | ஐ.அ.எ, டுபாயிலிலுள்ள கொள்சுலிருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ளார் | 15.09.2015 |
| திரு.ஜீ.எல்.ஞானதேவா உதவி வர்த்தகப் பணிப்பாளர் | ஜேர்மனி, பிராங்போர்ட் இலங்கை கொன்சுலேற்றிலிருந்து இலங்கைகுத் திரும்பியுள்ளார் | 12.02.2015 |
| திருமதி.எஸ்.எச்.எஸ்.அரியரத்ன உதவி வர்த்தகப் பணிப்பாளர் | சீனா, பெஜ்ஜிங்கிலுள்ள இலங்கை தூதரகத்திலிருந்து இலங்கைகுத் திரும்பியுள்ளார் | 08.07.2015 |
| திரு.டப்.ஏ.பி.சிரிமன்ன உதவி வர்த்தகப் பணிப்பாளர் | சவூதி, ரியாட்டிலுள்ள இலங்கை தூதரகத்திலிருந்து இலங்கைகுத் திரும்பியுள்ளார் | 02.01.2015 |
| ***சேவை நிலையங்களின் மாற்றம் – வெளிநாட்டு தூதரகங்களுக்களில் நியமிக்கப்படுதல்*** | | |
| திரு.ஏ.ஜி.என். கருணாதிலக வர்த்தகப் பணிப்பாளர் | நி.பி /உவநி மற்றும் சுவிற்சர்லாந்து, ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதரகத்திலிருந்து திரும்பியுள்ளதுடன் ஐ.இ.இலண்டனிலுள்ள உயர் ஸ்தானிகராலயத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். | 15.06.2015 |
| திருமதி.உசட்..ஏ.எம்.சாபி பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | ஜேர்மனி, பிராங்போர்ட் இலங்கை கொன்சுலேற்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். | 09.02.2015 |

| | | |
|---|---|---|
| திரு.ஏ.பி.ஜே.என்.குமார<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | தென் கொரியா, சியோலிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். | 20.03.2015 |
| திரு.எஸ்.எம்.சி.டி. யட்டோகொட<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | ஐ.அ.எ, டுபாயிலிலுள்ள கொள்சுலேற்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளார் | 08.10.2015 |
| திருமதி.ருவந்தி அரியரத்ன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | சீனா, பெஜ்ஜிங்கிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார் | 06.07.2015 |
| திரு.வை.வை.கே.டி சில்வா<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இந்தியா, சென்னையிலுள்ள துணை இலங்கை உயர் ஸ்தானிராயத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார் | 02.03.2015 |
| திருமதி.டி.எம்.எஸ்.என்.அபேரத்ன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | எகிப்து, கெய்ரோவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார் | 18.06.2015 |
| திரு.எம்.ஜி.கே.ஜே.குமார<br>பிரதி வர்த்தக பணிப்பாளர் | தென்னாபிரிக்கா, பிறிரோறியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். | 05.03.2015 |
| திரு.ஆர்.பி.ஜீ.ஆர். ராஜபக்ஸ<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | சவூதி, ரியாட்டிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார் | 19.03.2015 |

## 9. வருடாந்த கணக்குகள் – 2015

**தலைப்பு இல: 295**

**அமைச்சு / திணைக்களம்: வர்த்தக திணைக்களம்**

**நிகழ்ச்சித்திட்ட இல: 01**

**கருத்திட்ட இல: 01**

**மீண்டுவரும் செலவினம்**

| விபரணம் | 2014 உண்மை செலவினம் Rs. 000 | 2015 அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீடு Rs. 000 | 2015 மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு Rs. 000 | 2015 உண்மை செலவினம் Rs. 000 | 2015 சேமிப்பு Rs. 000 |
|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 34,179 | 44,600 | 45,456 | 44,898 | 558 |
| ஏனையவைகள் | 57,610 | 61,705 | 60,197 | 51,104 | 9,093 |
| **மொத்தம்** | **91,789** | **106,305** | **105,653** | **96,002** | **9,651** |

## மூலதன செலவினம்

| விபரணம் | 2014<br>உண்மை செலவினம்<br>Rs. 000 | 2015<br>மதிப்பீட்டு செலவினம்<br>Rs. 000 | 2015<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>Rs. 000 | 2015<br>உண்மை செலவினம்<br>Rs. 000 | 2015<br>சேமிப்பு<br>Rs. 000 |
|---|---|---|---|---|---|
| **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | **140** | **500** | **3,098** | **3,097** | **1** |
| கட்டிடம் மற்றும் கட்டுமானம் (2001) | 0 | 100 | 2,552 | 2,552 | 0 |
| பொறி, இயந்திரங்களும் உபகரணங்களும் (2002) | 43 | 0 | 0 | 0 | 0 |
| வாகனங்கள் (2003) | 97 | 400 | 546 | 545 | 1 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | **4,905** | **6,450** | **4,504** | **2,618** | **1,886** |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (2102) | 4,707 | 5,000 | 3,200 | 2,548 | 652 |
| இயந்திரங்கள் (2103) | 198 | 1,450 | 1,304 | 70 | 1,234 |
| **மனித வள மேம்பாடு** | **3,166** | **2,650** | **2,650** | **2,135** | **515** |
| ஊழியர்கள் பயிற்சி (2401) | 3,166 | 2,650 | 2,650 | 2,135 | 515 |
| **ஏனைய மூலதன செலவுகள்** | **5,020** | **6,000** | **6,000** | **4,292** | **1,708** |
| முதலீடு (2502)<br>01. **ஏற்றுமதி சந்தைகள் ஆய்வு** | 5,020 | 6,000 | 6,000 | 4,292 | 1,708 |
| **மொத்தம்** | **13,231** | **15,600** | **16,252** | **12,142** | **4,110** |